விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 08 வியாழக்கிழமை (24.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 280

## வடக்கின் வன்முறைக் கும்பல்களின் அனைத்து செயற்பாடுகளும் உடனடியாக கட்டுப்படுத்தப்படும்

### வட மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ



(யாழ்ப்பாணம்)
வடக்கில் இடம்பெறும் வன்முறைக் கும்பல்களின் செயற்பாடுகள் அனைத்தும் உடனடியாக கட்டுப்படுத்தப்படும் என வடக்கு மாகாண புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித்துள்ளார்.
இதேவேளை முப்படைகளின் உதவிகளுடன் குறித்த குழுககளின் சமூக விரோத செயற்பாடுகள் அனைத்தும் அடக்கப்படும் என்றும் 23

## குளிக்கச் சென்றவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

### அல்வாயில் சம்பவம்

(கரணவாய்)
கிணற்றில் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பருத்தித் 23

## வவுனியாவில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(வவுனியா)
வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.
நேற்று முன் தினம் இரவு வீட்டில் 23

## முகமாலையில் எலும்புக்கூடுகள் நேற்றும் மீட்பு



(அக்கராயன்)
கிளிநொச்சி முகமாலை பகுதியில் நேற்றும் எலும் புக் கூடுகள் 23

### நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்கு

# 20 ஆவது திருத்த சட்டத்தால் ஆபத்து ஏற்படலாம்

### பொதுநலவாயம் சார்ந்த அமைப்பு கவலை

(கொழும்பு)
அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தால் பக்கச்சார்பற்ற நீதித்துறையின் சுயாதீனத்துக்கு ஆபத்து ஏற்படலாம் என பொதுநலவாயத்தை சார்ந்த நான்கு அமைப்புகள் கவலை தெரிவித்து அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுமா?

### நீதிமன்றம் இன்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)
தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு அமைய மன்றினால் வழங்கப்பட்ட தடை உத்தரவை நீடிப்பதா? அல்லது நீக்குவதா? என்ற கட்டளை இன்று வியாழக்கிழமை வழங்கப்படும் என நீதவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது.
தியாக தீபம் 23

## க.பொ.த உ/த புலமைப்பரிசில் ஒக். 12 11

### கல்வியமைச்சு மீண்டும் அறிவிப்பு

(கொழும்பு)
இந்த ஆண்டு நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.
கல்விப் பொதுத் 23

### நீதிமன்ற தீர்ப்பின் பின்னரே

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் அடுத்த கட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசியக் கட்சிகளின் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக இன்றைய தினம் முடிவு அறிவிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை கூடிய 23

## ராஜபக்ஷ அரசை கவிழ்க்க 20 ஆவது திருத்தச் சட்டமே போதும்

### மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)
தற்போதைய அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு 20 ஆவது திருத்த சட்டமூலம் ஒன்றே போதும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று 23

## 20ஆவது திருத்தத்துக்கு எதிராக இரா.சம்பந்தன் உட்பட 6 பேர் நீதிமன்றில் மனு

(கொழும்பு)
புதிய அரசு கொண்டு வந்திருக்கும் அரசமைப்பின் 20ஆம் திருத்தத்திற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் 23

## நேற்று மட்டும் 11 பேருக்கு கொரோனா

(கொழும்பு)
இலங்கையில் நேற்று மட்டும் 11 23

## தியாகி திலீபன் நினைவாக வவுனியாவிலிருந்து நடை பயணம்

### ஏற்பாட்டாளர்களுக்கு நீதிமன்றம் அழைப்பு

(வவுனியா)
தியாகி திலீபனின் நினைவாக வவுனியாவிலிருந்து நல்லூர் வரையிலான நடைபயணத்தினை ஏற்பாடு செய்தவர்களை நீதிமன்றில் ஆஜராகுமாறு வவுனியா நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
தியாகி திலீபனின் நினைவாக கடந்த 23

## ஊழல் மோசடிகளுக்கே வழிவகுக்கும்

# 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படக் கூடாது

## கஜேந்திரன் எம்.பி சபையில் வலியுறுத்து

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20-ஆவது திருத்தச் சட்டம் எதிர்காலத்தில் நாட்டில் பாரிய நிதி மோசடிகளும் ஊழல்களும் இடம்பெறுவதற்கே வழிவகுக்கும். அத்துடன் நாட்டில் ஜனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைக்கும் ஒன்றாகவும் காணப்படுகின்றது.

எனவே 20ஆம் திருத்தம் நிறைவேற்றப்படக்கூடாதென அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் பாராளுமன்றில் இன்று தெரிவித்தார்.

20-ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் நேற்று பாராளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவரது நேற்றைய பாராளுமன்ற உரையின் சுருக்கம் வருமாறு.

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 148 ஆவது உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றமானது பகிரங்க நிதிகளின் மீது பூரண கட்டுப்பாட்டினை கொண்டிருக்க வேண்டும். ஆனால் தற்போது பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 ஆவது திருத்தச் சட்டயோசனையின் பிரகாரம் பாராளுமன்றம் அந்த அதிகாரத்தினை முற்றாக இழக்கின்றது.

இந்நிலையானது நாட்டில் எதிர்காலத்தில் பாரிய நிதி மோசடிக்கு வழிவகுக்கும்.

19ஆவது திருத்தச் சட்டத்தின் உறுப்புரை 41 (ஆ) வின் பிரகாரம் கணக்காய்வு சேவை ஆணைக்குழு உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் புதிதாக கொண்டுவரப்படவுள்ள 20 ஆம் திருத்த யோசனையின் பிரகாரம் அது முற்றாக நீக்கப்படுகின்றது.

எனவே இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்தில் நாட்டில் பாரிய நிதி மோசடிகளும் ஊழல்களும் இடம்பெறுவதற்கே வழிவகுக்கும். ஆத்துடன் நாட்டில் ஜனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைக்கும் ஒன்றாகவும் காணப்படுகின்றது. எனவே 20ஆம் திருத்தம் நிறைவேற்றப்படக்கூடாதென வலியுறுத்துகின்றோம்.

மேலும் வடமாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் எட்டு தொடக்கம் 10 வருடங்கள் கடமையாற்றியுள்ளபோதும் அவர்களுக்கான இடமாற்றங்கள் பலருக்கு வழங்கப்படவில்லை. இதன் காரணமாக விரக்தியடைந்த அரச உத்தியோகத்தர் ஒருவர் அண்மையில் மன்னார் மாவட்டத்தில் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனவே கடமையாற்ற வேண்டிய காலத்தை நிறைவு செய்துள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சு நடடிவக்கை எடுக்க வேண்டுமென விநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தமிழ் பிரிவுக்கு இன்னமும் கணக்காளர் நியமிக்கப்படவில்லை. அதன் காரணமாக தமிழ் மக்கள் பாரிய இடர்களை எதிர் நோக்குகின்றனர். எனவே உடனடியாக கல்முனை வடக்கு தமிழ் பிரிவு பிரதேச செயலகத்திற்கு தனியான கணக்காளர் ஒருவரை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன். (ம-03)

## தமிழ்நாட்டில் அகதிகளாகவுள்ள

# 83 ஆயிரம் இலங்கைத் தமிழர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்த வேண்டும்

## சுரேன் ராகவன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்நாட்டில் அகதிகளாகவுள்ள 83 ஆயிரம் இலங்கைத் தமிழர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுப் போரின் காரணமாக, இடம்பெயர்ந்து இந்தியாவின் தமிழ் நாட்டில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளவர்களுக்கே இலங்கையில் இடம்பெறும் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் நேற்றைய தினம் கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர்,

தேர்தல் என்பது ஜனநாயகத்தின் அடிப்படையாக மட்டுமன்றி ஒரு நாகரிகத்தின் முதுகெலும்பாகவும் காணப்படுகின்றது.

தேர்தல் அநியாயங்களுக்கு தமிழர்களைப் போன்று முகம்கொடுத்த சமூகம் இலங்கையில் இருக்க முடியாது.

தேர்தல் காலத்திலேயே தமிழர்களின் பொக்கிஷமான யாழ். பொது நூலகம் தீக்கிரை யாக்கப்பட்டது என்பதை அதியுயர் சபையான பாராளுமன்றம் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கும் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையை வழங்க வெளிவிவகார அமைச்சும், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொடர்பான அமைச்சும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

யுத்தத்தின் காரணமாக பாதிப்படைந்து அவயங்களை இழந்தவர்களுக்கும் முறையாக வாக்களிப்பதற்கான வசதிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற யோசனையையும் பாராளுமன்ற விவாதத்தின் போது முன்வைத்துள்ளார். (ம-03)

## மாமனாரை பொல்லால் அடித்து

# கொலை செய்தவருக்கு 10 வருட கடூழிய சிறை

(திருகோணமலை)

மனைவியின் தந்தையை பொல்லால் அடித்துக் கொலை செய்த குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறைத் தண்டனையை விதித்துள்ளது திருகோணமலை மேல் நீதிமன்றம்.

திருகோணமலை - உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாம்பல் தீவு பகுதியில் கடந்த 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி மனைவியின் தந்தையான நாகராசா பூலோகராசா என்பவரை பொல்லால் அடித்து கொலை செய்த குற்றத்திற்காக இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மூதூர், சேனையூர் ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த விஜேசேகரன் விஜேகரன் என்பவருக்கே திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்றைய தினம் குறித்த தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

மனைவி கர்ப்பிணியாக இருக்கின்ற போது தனது மனைவியை தாக்கிய நேரத்தில் மனைவியின் தந்தையாரான நாகராசா பூலோகராசா என்பவரை பொல்லால் அடித்து கொலை செய்ததற்காக குற்றவாளி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில், குற்றத்திற்காக 10 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

இதேவேளை, உயிரிழந்தவரின் மனைவிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்குமாறும் அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டு வருட கடூழிய சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 5ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் அப்பணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் மூன்று மாதகாலம் கடூழிய சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறும் திருகோணமலை மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ம-03)

# புத்தூர்ச் சந்தியில் விபத்து நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)


யாழ்.புத்தூர்ச் சந்தியை அண்மித்த பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 4 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில், இருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இரு மோட்டார் சைக்கிள்களில் மிக வேகமாக வந்த இளைஞர்கள் கட்டுப்பாட்டை இழந்து மற்றொரு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த முதியவர் மீது மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 4 பேர் காயமடைந்துள்ளதுடன், இரு இளைஞர்கள் மிக ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இவ் விபத்து தொடர்பில் அச்சுவேலி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ம-03,08,60)



**PHARMACIST'S (EXTERNAL) EXAM - DEC 2020**
**மருந்தியலாளர் ( வெளிவாரி ) பரீட்சை**
**மார்கழி - 2020**

மேற்படி பரீட்சை 12.12.2020 ஆம் திகதி கொழும்பில் நடைபெறுவதாக Ceylon medical College Council அறிவித்துள்ளார்கள். இதற்கான பரீட்சைக் கட்டணம் ரூபா 10.000/=

பரீட்சையில் தோற்றுவதற்குரிய விண்ணப்பத்தை 06.10.2020 ஆம் திகதிக்கு முன்னர் www.cmcc.lk எனும் website இல் Online முறையில் விண்ணப்பிக்கலாம். இந்தப் பரீட்சை சம்பந்தமான மேலதிக தகவல்கள் 27.09.2020 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கான கலந்துரையாடலில் அறிந்து கொள்ளலாம். (4070)

இடம் :- மருந்தியலாளர் கல்வி மண்டபம், யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரி பட்டப்படிப்பு), 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**தொடர்பு - 077 316 4251**

## யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்

# கல்வி நடவடிக்கைகளுக்கான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் கல்வி நடவடிக்கைகளுக்கான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சிறீசற் குணராஜா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

2194/29 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி மூலம் இதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33ஆவது உறுப்புரையினால் ஜனாதிபதிக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பிரயோகித்து. 2020.03.31 ஆந் திகதி ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட "இலங்கையின் கல்வி நடவடிக்கைகளுக்கான ஜனாதிபதி செயலணி" க்கு அமைச்சுக்களுக்கும், இராஜாங்க அமைச்சுக்களுக்கும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள செயலாளர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட துணைவேந்தர்களும் நேற்று 23ஆம் திகதி புதன் கிழமை முதல் நியமனம் செய்யப்படுவதாக ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-03,09)

# குடியிருக்காதவர்களின் காணிகளை இரத்துச் செய்துவிட்டு காணி அற்றோருக்கு வழங்க நடவடிக்கை எடுங்கள்

## ஆளுநர் அதிரடி

(நெளுக்குளம்)

**அரச ஊழியர்களிற்காக ஓமந்தையில் வழங்கப்பட்ட காணிகளில் வீடுகளை அமைத்த நிலையில் குடியிருக்காதவர்களது காணிகளை இரத்துச் செய்துவிட்டு காணி, வீடு அற்றோருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.**



வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் ஆளுநர் சாள்ஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் இணைத்தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றிய காணி அற்ற 600 இற்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களிற்கு ஓமந்தை பகுதியில் காணிகள் வழங்கப்பட்டு குடியேறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அவற்றில் 131 வீடுகள் யாருமற்ற நிலையில் வெறுமையாக இருப்பதாக வீடமைப்பு அதிகாரசபை அதிகாரியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் வசிக்காதவர்களது காணிகளை இரத்துச் செய்து வீடற்றோருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆளுநரால் தெரிவிக்கப்பட்டதுடன், ஏனைய பகுதிகளில்இவ்வாறானநிலைமை இருந்தால் பிரதேச செயலாளர்களை அவற்றை ஆராயுமாறு உத்தரவிட்டார். (5-299)

# 20 ஆவது சட்டமூலத்தால் சர்வதேச ரீதியாக பல அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிடும்

## கிரியெல்ல



(கொழும்பு)

20 ஆவது திருத்தச் சட்டமூலத்தினால் சர்வதேச ரீதியாக இலங்கை பல அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "சுயாதீன ஆணைக்குழுக்களை ஐக்கியத் தேசியக் கட்சி ஸ்தாபிக்கவில்லை.

மாறாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கமே சுயாதீன ஆணைக் குழுக்களை ஸ்தாபித்தது. 17 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக தேர்தல்கள் ஆணைக் குழு மட்டுமன்றி, பொலிஸ் ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்தும் கொண்டுவரப்பட்டது.

அதற்கு தற்போதுள்ள அரசாங்கத்தினர் அன்று வாக்களித்தார்கள். பின்னர் 18 ஆம் திருத்தத்தைக் கொண்டுவந்து சுயாதீன ஆணைக்குழுக்களை இல்லாது செய்யவும் இவர்கள் வாக்களித்தார்கள்.

பின்னர் 19 இல் மீண்டும் சுயாதீன ஆணைக்குழுக்கள் கொண்டுவரப்பட்டமைக்கும் ஆதரவு தெரிவித்து, மீண்டும் 20 இன் ஊடாக அவற்றை இல்லாது செய்ய முற்படுகிறார்கள்.

நாம் தேர்தல்களில் தோல்வியடைந்தாலும் ஒரு கொள்கையின் கீழ்தான் இதுவரை பயணித்துக்கொண்டிருக்கிறோம். அரசாங்கத் தரப்புக்குத்தான் ஒரு கொள்கையொன்று இல்லை. காலத்துக்குக் காலம் அவர்களின் கொள்கை மாறிக் கொண்டே செல்கிறது.

20 இன் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாது செய்யப்பட்டால் நாம் மீண்டும் பின்னோக்கி நகரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு உள்ளாவோம்.

தனியொரு நபருக்கு அனைத்து அதிகாரங்களையும் கொடுப்பது சரியா என்று கேட்க விரும்புகிறோம். எமது காலத்தில் அனைவருக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. மக்கள் நிம்மதியாக இருந்தார்கள். இவை அனைத்தையும் இல்லாது செய்யவே அரசாங்கம் முற்படுகிறது.

இதனால்தான், 20 இற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கிறோம். பாராளுமன்றின் பலம் இதனால் இல்லாது போய்விடும்.

யாரை வேண்டுமானாலும் ஜனாதிபதி பிரதமராக நியமிக்கலாம்.

பிரதமருக்கு எந்தவொரு அதிகாரமும் இல்லாது போய் விடும். இப்போதே இந்த விவகாரம் சர்வதேச ரீதியாக கவனத்தை ஈர்த்துள்ளது. இது சர்வதேச ரீதியாக எமக்கு பிரச்சினையை ஏற்படுத்தும். அவர்கள் இப்போதும் இதுதொடர்பாக பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

20 இற்கு ஆதரவளிப்பது என்பது எதிர்கால சந்ததியினரை காட்டிக்கொடுப்பது போன்றதாகும்.

இலங்கை வரலாற்றினால் 20 இற்கு ஆதரவானவர்கள் குப்பைத் தொட்டியிலேயே போடப்படுவார்கள்" என அவர் மேலும் தெரிவித்தார். (2-7)

# இரத்து செய்யப்பட்ட வர்த்தமானி

(கொழும்பு)

அரசாங்கத்தால் கடந்த 10 ஆம் திகதி வெளியிட்ட 2192/36 இலக்க வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வித உறுதிப்பத்திர ஆவணங்களும் இன்றி, அரச காணிகளில் குடியிருப்போர் அல்லது அக்காணியை அபிவிருத்தி செய்த நபர்களுக்கு அவற்றின் சட்ட ரீதியான உரிமையை வழங்குவதற்காக வெளியிட்ட வர்த்தமானியே இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

வனப் பாதுகாப்பு, சரணாலயங்கள் உட்பட அரச காணிகளை அனுமதியின்றி பயன்படுத்தி வரும் நபர்களுக்கு அவற்றை வழங்குவதற்காக அரசாங்கம் இந்த வர்த்தமானியை வெளியிட்டிருந்தது.

இருப்பினும் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் உட்பட பல தரப்பினர் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்த நிலையில், குறித்த வர்த்தமானி அறிவித்தலை 12 நாட்களுக்குள் அரசாங்கம் இரத்துச் செய்துள்ளது.

இதேவேளை அண்மையில் வெளியிடப்பட்ட சாய்ந்தமருது நகர சபையை உருவாக்கும் வர்த்தமானி அறிவித்தல் போன்ற சில வர்த்தமானி அறிவித்தல்கள் இவ்வாறு குறுகிய காலத்திற்குள் இரத்துச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# நில அளவைத் திணைக்களத்தின் சேவைகளை மேம்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

நில அளவை திணைக்களத்தின் சேவைகளை மிகவும் செயற்றிறன் மிக்கதாக மேற்கொள்ளும் நோக்கில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் திணைக்களத்தின் நிர்வாக வலைப்பின்னலை ஸ்தாபித்தல் மற்றும் அதனூடாக நில அளவை மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல் மற்றும் பயன்களை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாகக் காணி தொடர்பான தகவல்களைப் பயன்படுத்தும் தரப்பினரின் சேவைக்கு இலகுவான வகையில் அடிப்படை வசதிகளுடனான காணித்தகவல் சேவைக் கட்டமைப்பொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இலங்கை, கொரிய நாட்டின் கடன் உதவியைப் பெற்றுக் கொள்ளும் இராஜதந்திர வேலைத்திட்டத்தின் கீழ் 60.33 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டுடன் இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிபார்சுக்கு அமைவாக "காணி தரவு" அடிப்படை வசதி மற்றும் காணி தகவல் சேவைக் கட்டமைப்பை ஸ்தாபிக்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக காணி அமைச்சர் சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஜ-4)

# சைகை மொழிகள் தினத்தை முன்னிட்டு

## விழிப்புணர்வுப் பேரணி

(சாவகச்சேரி)

சர்வதேச சைகை மொழிகள் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி செவிப்புலனற்றோர் நலன்புரி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் புதன்கிழமை காலை சாவகச்சேரி பகுதியில் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தென்மராட்சியில் உள்ள செவிப்புலனற்றவர்கள் ஒன்றிணைந்து மீசாலையில் இருந்து சாவகச்சேரி பஸ் நிலையம் வரை சைகை மொழியின் உரிமைகள் தொடர்பாகவும் அவற்றின் அவசியம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக சமூகத்திற்கு எடுத்துக் காட்டும் முகமாக விழிப்புணர்வு பேரணியில் ஈடுபட்டனர். (5-4-30)



# 24 லட்சம் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை - பசில்



(கொழும்பு)

தேசிய வீட்டுத்தோட்ட செயற்றிட்டத்தின் கீழ் நாடு தழுவிய ரீதியில் 24 இலட்சம் வீட்டுத் தோட்டங்களை அமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பொருளாதார புத்தாக்கம், வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

விவசாயத் திணைக்கள அதிகாரிகள், அரச அதிகாரிகளுடன் நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேசிய உற்பத்திகளை துரிதமாக ஊக்குவிப்பது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும். செயற்றிறன் மிக்க பிரஜைகள் - மகிழ்ச்சியான குடும்பம் என்ற செயற்றிட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மரக்கறி மற்றும் பழங்கள், தானிய உற்பத்திகளை ஒவ்வொரு குடும்பமும் சுயமாக உற்பத்தி செய்து கொண்டால் உணவுப் பற்றாக்குறை, உணவு இறக்குமதி ஆகியவற்றுக்கான தேவை தோற்றம் பெறாது.

பெருந்தெருக்கள் அபிவிருத்தி செய்யப்படும் வேலையில் விவசாயத்துறைக்கும் முன்னுரிமை வழங்கப்படும். விவசாய உற்பத்தியில் நாடு தன்னிறைவு அடைய வேண்டும். இதற்கான நடவடிக்கைகள் விவசாய அமைச்சு, விவசாய திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும்.

24 இலட்சம் வீட்டுத்தோட்டம் அமைத்தல் திட்டம், வலய, மாவட்ட மற்றும் மாகாண அடிப்படையில் செயற்படும் விவசாயத்துறை ஸ்தாபனங்களுடன் இணைந்து முன்னெடுக்கப்படும்.

பழங்கள், மரக்கறி மற்றும் தானிய உற்பத்தி ஆகியவற்றை உற்பததி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுப்படும். சுற்றாடல் துறையின் பாதுகாப்பு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தும். டெங்கு பரவாத வகையில் சுற்றாடல் பாதுகாப்பு சார் நடவடிக்கைகள், துரிதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (2-7)

# இடைவகுப்பு மாணவர்கள் அனுமதி; மீள் அறிவித்தல் வரை இடைநிறுத்தம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் இடை வகுப்புகளுக்கு மாணவர்களை சேர்ப்பது மீள் அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வியமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இம்முறை கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை அடுத்த மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

அதேநேரம் 2020 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை அதே மாதம் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஜ-4)

# கிராம உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தின் அறிவித்தல்

(கொழும்பு)

நாட்டின் அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை தமது அலுவலகங்களில் அவசியம் இருக்க வேண்டும் என அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

அதேபோல் சனிக்கிழமைகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரையும் தமது அலுவலங்களில் இருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஜ-4)

# குணமடைந்தோர் 3129

(கொழும்பு)

நாட்டின் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் 11 பேர் பூரண குணமடைந்து நேற்று புதன் கிழமை வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 129 ஆக அதிகரித்துள்ளது.

இதேநேரம் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தில் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் 52 பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்தக் கொடிய வைரஸ் தொற்று காரணமாக நாட்டில் இதுவரையில் 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஹேமசிறி, பூஜித ஜயசுந்தரவின் விசாரணைகள் நிறைவு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதென குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.



உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்காததன் ஊடாக கொலைக் குற்றம் புரிந்ததாக குற்றம் சுமத்தி குறித்த இருவருக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரும் நீதிமன்ற பிணையில் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், வழக்கு தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது. (ஜ-4)

# குடிசன, வீடமைப்புத் தொகை அடுத்த ஆண்டு கணக்கெடுப்பு

(கொழும்பு)

நாட்டின் குடிசன மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பு நடவடிக்கை அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாட்டில் 10 வருடங்களுக்கு ஒருமுறை, குடிசன மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பு கணக்கெடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

கணக்கெடுப்பு கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்த கணக்கெடுப்பு நடவடிக்கையின் மூலம், தேசிய கொள்கைகளை வகுப்பதற்கும் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் தேவையான மக்கள் தொகை, அதன் புவியியற் பரம்பல், இன ரீதியான பரம்பல் மற்றும் மக்கள் தொகை, புள்ளி விபரங்கள், சமூகப் பண்புகள், வீடுகளின் தரம் உள்ளிட்ட விடயங்கள், தற்போதைய தரவுகள் ஆகியன கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் வழங்கப்படும்.

இந்த நிலையில், நாட்டில் கொரோனா தாக்கம் காரணமாக, இந்த ஆண்டு ஜுலை மாதம் முதல் ஆரம்பிக்கப்பட திட்டமிடப்பட்டிருந்த குடிசன மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இதன் காரணமாக, நாட்டின் குடிசன மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பு நடவடிக்கையை எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, குடிசன மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பு நடவடிக்கையின் திட்டமிடல் செயற்பாடுகள் எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே வரை முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், குடிசன மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பு கணக்கெடுப்பு செயற்பாடு, எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு ஜுன் முதல் நவம்பர் வரை மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், குடிசன மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பு தரவுகளை விளம்பரம் செய்யும் நடவடிக்கைகள், எதிர்வரும் 2021ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2022 ஆம் ஆண்டு மே வரை முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், கணக்கெடுப்பு திட்டப் பணிகளில் காணப்படும் தகவல்களின் சரியான தன்மையை உறுதி செய்யும் கணக்கெடுப்புக்குப் பிந்திய ஆய்வு, எதிர்வரும் 2022ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆபாச வெளியீடுகளை தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)


ஆபாச வெளியீடுகளை தடை செய்யும் புதிய சட்டமூலத்தை அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியது.

அண்மைக்காலமாக சிறுவர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆபாச வெளியீடுகள் பல்வேறு ஊடகங்கள் மூலம் வெளியிடப்படுவது மிக வேகமாக அதிகரித்து வருவதை கவனத்தில் கொண்டு அரசாங்கம் இத்தகைய தீர்மானத்தை எடுத்துள்ளது.

இப்படியான வெளியீடுகள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஏற்பாடுகள் குற்றவியல் தண்டனை சட்டம் மற்றும் ஆபாச வெளியீடு தொடர்பான கட்டளைச் சட்டம் ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் தற்கால நிலைமையில் அந்தச் சட்டங்கள் போதுமானதாக இல்லை என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகவுள்ளது.

இதனால், இதற்கு தீர்வு காணும் வகையில் இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் இலங்கை கணனி அவசர பதிலளிப்பு பிரிவு என்பன சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய புதிதாக சட்டமூலம் ஒன்றை உருவாக்க தேவையான தகவல்கள் அடங்கிய ஆவணத்தை ஏற்கனவே தயாரித்துள்ளன.

இந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய சட்டமூலத்தை உருவாக்குவதற்கான ஆலோசனைகளை சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு வழங்கும் யோசனை ஒன்றை நீதியமைச்சர் அலி சப்ரி முன்வைத்துள்ள நிலையில், அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் வெற்றிலைக் கேணியைச் சேர்ந்த கறுவல் தம்பி தேவன் குடும்பத்தினர் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய மாணவர்கள் 10 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கினர். (படம்:- பொற்பதி செய்தியாளர்)


# பருத்தித்துறை நகர சபை
# பெறுகை அறிவித்தல் - சபை நிதி 2020

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2016.09.30 ஆம் திகதிய **04/2016 (i)** இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் படி வடமாகாண எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட பெறுகைதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையில் காட்டியபடி வீதிப் புனரமைப்புக்கு பொருத்தமான தரங்களில் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் **(CIDA)** பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை **(Schedule)** பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகர சபை அலுவலகத்தில் (தொலைபேசி இலக்கம்:- 021 226 3213) மேலதிக தகவல்களையும் பெறுகை ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
6. பெறுகைப் பத்திரம் வழங்கப்படும் திகதி 24.09.2020 ஆம் திகதி தொடக்கம் 08.10.2020 ஆம் திகதி பி.ப.15.00 மணிவரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா **2000/=** இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனி தபாலுறைகளில் இட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் மூலப்பிரதி, இணைப்பிரதி என குறிப்பிட்டு தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகர சபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு 2020.10.09 ஆம் திகதி பி.ப.15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ சேர்ப்பிக்க வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகை நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பெறுகை திறக்கப்படும்.
8. பெறுகையானது சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து நாற்பத்தொன்பது (49) நாட்கள் (26.11.2020) வரையும் செல்லுபடியாகும்.
9. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 2020.09.30 ஆம் திகதியன்று மு.ப.10.00 மணிக்கு நடைபெறும்.
10. பெறுகை தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் அதிகாரம் பெறுகைக்குழுவின் தலைவருக்கே உண்டு.
11. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறுஅமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் ரூபாவில் (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | நிதி மூலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு ரூபா | செல்லுபடியாகும் காலம் |
| 1 | முதலாம் கட்டைவீதி 1ஆம் ஒழுங்கை (NJPUE211) | 1.00Mn | 30 நாட்கள் | சபை நிதி2020 | C7/C8 | 10000.00 | 25.12.2020 |
| 2 | வுரத விநாயகர் வீதி (தார்) (NJPUE072), கடற்கரை வீதி 4 ஆம் ஒழுங்கை (தார்) (NJPUE013) | 2.00Mn | 45 நாட்கள் | சபை நிதி2020 | C7/C8 | 20000.00 | 25.12.2020 |
| 3 | தோட்டக்காணி வீதி (தார்)(NJPUE161) சுப்பர்மடம் 2ஆம் ஒழுங்கை (தார்) (NJPUE159) அவ்வொல்லை பிள்ளையார் கோவில் பின் வீதி (தார்) (NJPUE159) | 2.015Mn | 45 நாட்கள் | சபை நிதி2020 | C7/C8 | 20000.00 | 25.12.2020 |

**திரு.யோ.இருதயராஜா,** (C-369)
**தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக் குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை.**


# சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளின் தீர்ப்பை விரைவுபடுத்துவதில் அரசு அதிக கவனம்



(கொழும்பு)


சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளின் தீர்ப்பை விரைவுபடுத்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், குழந்தையின் நல்வாழ்வுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் வழக்குக் குறித்த சாட்சியங்களைப் பதிவுசெய்ய மூடிய நீதிமன்ற வசதிகளை வழங்குவதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், முன்பள்ளி மற்றும் தொடக்கக் கல்வி, பாடசாலைகள் ஆகியவற்றின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற போது இவ்விடயம் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-4)

# மீண்டும் புத்துயிர் பெறும் கோட்டை மிதக்கும் கடைத்தொகுதி



(கொழும்பு)

நாட்டின் பாரம்பரியம், உள்ளூர் பொருட்கள்மற்றும்உணவு ஆகியவற்றில் ஆர்வமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் 2014 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு கடந்த 4 வருடங்களாக அரசாங்கம் அதனை கைவிட்டமையால் உகந்த பராமரிப்பு இன்றி காணப்பட்ட கோட்டை மிதக்கும் கடைத் தொகுதியை புதுப்பிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது 2014 ஓகஸ்ட் 25 இல் திறந்து வைக்கப்பட்ட மிதக்கும் கடைத்தொகுதியின் புதுப்பித்தல் பணிகள் சுமார் 4 வருடங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-4)



இலங்கை வங்கியின் வடபிராந்தியத்தின் புதிய பிரதி பொது முகாமையாளரான வல்லிபுரம் சிவானந்தன் இலங்கை வங்கி ஊழியர்களால் பாரம்பரிய முறைப் படி வரவேற்கப்பட்டு நேற்று தனது கடமைகளைப் பொறுப்போற்றார்.

# யாழில் வீசிய கடும் காற்றினால் வீடு, முன்பள்ளி சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழில், கடந்த இரண்டு நாட்களாக வீசிய கடும் காற்றினால் 3 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரி ஜே/299 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு ட்பட்ட பகுதியில் வீடொன்று பகுதியளவில் சேதமடைந்ததால் 3 அங்கத்தவரைக் கொண்ட குடும்பமொன்றும் யாழ்ப்பாணம் ஜே/81 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வீடொன்று பகுதியளவில் சேதமடைந்ததால் 5 அங்கத்தவரைக் கொண்ட 2 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட முன்பள்ளியொன்றின் கட்டடக் கூரையும் காற்றினால் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-8)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி ராஜனி திராணகம ஞாபகார்த்த கலந்துரையாடல் இன்றைய காலத்துக்கான ஜனநாயகத்தினை உருவமைத்தல் எனும் கருப்பொருளில் அமையவுள்ளது.

இக்கலந்துரையாடல் நாளை மறுதினம் 26 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சென்.ஜோன்ஸ் தேவாலய பரிஷ் மண்டபத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர்களான தீபிகா உடகம; ஷாமளகுமார் ஆகியோருடன் செயற்பாட்டாளர் தயாபால திராணகமவும் பேச்சாளர்களாகக் கலந்து கொள்வார்கள். (5)

# கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைப் பகுதியில் பட்டப்பகலில் வீடு புகுந்து உயிர் அச்சுறுத்தல் விடுத்து நகைகளை கொள்ளையிட்டுத் தப்பிச் சென்ற இருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீரிமலைப் பகுதியில் பட்டப்பகலில் இந்தக் கொள்ளைச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் ஒருவரின் வீட்டுக்குள் கொட்டன்கள், கத்திகளுடன் உள்நுழைந்த இருவர், அதிபரின் மனைவி அணிந்திருந்த இரண்டரைப் பவுண் தங்க நகைகளை அபகரித்துச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் இரகசியப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் காங்கேசன்துறை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த 19, 23 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கொள்ளை யிடப்பட்ட இரண்டரைப் பவுண் தங்க நகைகளும் 720 மில்லிகிராம் ஹெரோயினும் வாள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-8)

# நெடுந்தீவு உறவுகள் ஒன்றிணையும் மாநாடு

(குப்பிழான்)

"ஊரும் உறவும் நெடுந்தீவு" அமைப்புச் சர்வதேச பொதுக் கட்டமைப்பின் ஊடாக ஏற்பாடு செய்துள்ள நெடுந்தீவின் உறவுகளாய் ஒன்றிணையும் மாநாடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நெடுந்தீவு கலாசார மண்டபத்தில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்குவோம்" எனும் தொனிப் பொருளில் மேற்படி மாநாடு இடம்பெறவுள்ளது.

ஊரில் வாழும் அனைத்து உறவுகளையும் இணைத்து நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டு வரும் மேற்படி மாநாட்டினை உலகெங்கும் வாழும் நெடுந்தீவு சொந்தங்கள் இணைந்து zoom தொழில்நுட்பம் ஊடாகப் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (5-18)

# சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக சஞ்சீவ தர்மரட்ண பதவியேற்பு



(குப்பிழான்)

வடமாகாணத்தின் புதிய சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக சஞ்சீவ தர்மரட்ண நேற்றுப் புதன்கிழமை காலை காங்கேசன்துறையில் அமைந்துள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

பொலிஸ் அணிவகுப்பு மரியாதையுடன் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இதேவேளை, வடமாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றி வந்த விஜய குணவர்த்தன அண்மையில் ஓய்வுபெற்ற நிலையில் வடக்கு மாகாணத்தின் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக சஞ்சீவ தர்மரட்ண இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். (5-8-4-18)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தற்போதைய தொற்று நோய் சூழலை கருத்தில் கொண்டு ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்களுக்கான சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

அந்தவகையில் நாளை 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை பிரதான மண்டபத்தில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

அதிபர் தி.தவரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வளவாளராக சித்த வைத்தியர் செல்வி எம்.சுகன்யா கலந்து கொள்வார். (5)

# பேருந்து-மோ.சைக்கிள் விபத்து தாயும் மகனும் காயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் - பிரதேச சபைக்கு முன்பாக நேற்று புதன்கிழமை காலை பேருந்து மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற தாயும் மகனும் காயமடைந்துள்ளனர்.

இதில் மிருசுவில் வடக்கு மிருசுவிலை சேர்ந்த 48 வயதான சி.லதா மற்றும் அவரது மகனான 21 வயதான சி.நிதுர்சன் ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# பங்குச்சந்தை முதலீடுகள் தொடர்பான ஆர்வலர்களுக்கான பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்று நோய் தாக்கத்திற்குப் பின்னர் உலகளாவிய ரீதியில் பங்குச்சந்தைகள் வீழ்ச்சி கண்டிருந்தன.

அதேபோல் இலங்கையிலும் வீழ்ச்சி கண்டிருந்த பங்குச்சந்தை கடந்த மே மாதம் 11 ஆம் திகதி மீளவும் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகின்றது.

இந்நிலையில் தற்போது புதிய முதலீட்டாளர்களும் பங்குச்சந்தை முதலீடுகளை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவ்வாறு புதிதாக பங்குச்சந்தையில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வம் காட்டும் முதலீட்டாளர்கள் மத்தியில் பங்குச்சந்தை தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் நாளை மறுதினம் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் யாழ்.கிளையில் முதலீட்டு ஆர்வலர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று நடைபெறவுள்ளது.

எனவே ஆர்வமுள்ளோர், மேலதிகத்தகவல்களுக்கு கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் யாழ்.கிளை முகாமையாளர் ச.சுபானந்தனை 077 710 5205 என்ற இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும். (5-4)



பலாலி விமான நிலைய வேலைவாய்ப்பு பயிற்சிநெறி தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், இலங்கை விமான சேவை பிரதிநிதிகள் மற்றும் யாழின் பிரபல ஹோட்டல்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் அமரர் செ.கந்தையா (அதிபர்) ஞாபகார்த்த திறன் வகுப்பறைகள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன. வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப.கணேசன் ஆகியோர் திறன்வகுப்பறைகளைத் திறந்து வைத்தனர். இந்நிகழ்வில் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் எழுதிய "இலக்கியத்துடனூடாக ஆங்கிலம் கற்பித்தல்" நூலை முன்னாள் ஆங்கில மொழிப்பிரிவின் தலைவர் எஸ்.சுந்தரேஸ்வரன் வெளியிட்டு வைக்க வைத்திய கலாநிதி எஸ்.கிரிதரன் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். எனவே அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் எல்.ஐ.றொகான் அறிவித்துள்ளார். (5)

# ‘20’ இல் பிரதமரின் நிலைப்பாடு என்ன?

## கபீர் ஹாசிம் கேள்வி



(கொழும்பு)

20ஆவது திருத்தம் மூலம் பாராளு மன்றத்தில் பிரதமரின் அதிகாரம் இல்லா மலாக்கப்படுகின்றது. அதனைத் தடுக்க வும் ஜனநாயகத்தை பாதுகாக்கவுமே அரசியலமைப்பின் 20 ஆவது திருத் தத்தை எதிர்க்கின்றோம்.

அத்துடன் 20 தொடர்பில் பிரதமரின் நிலைப்பாடு என்ன என கேட்கின்றோம் என எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அர சாங்கம் ஆட்சிக்கு வந்து ஆரம்பத்திலே வற்வரியை 47வீதம் குறைத்தது. இந்த வரி குறைப்பினால் மக்களுக்கு எந்த பயனும் இல்லை.

பொருட்களின் விலையில் ஒரு ரூபாவைக்கூட குறைப்பதற்கு அரசாங் கத்துக்கு முடியவில்லை. வரிகுறைப் பின்னால் கிடைக்கப்பெற்ற லாபம் யாரு டைய பொக்கெட்டுக்கு சென்றது என கேட்கின்றோம்.

மேலும் தற்போதைய அரசாங்கம் கடந்த காலங்களில் இருந்து ஆட்சிக்கு வரும்போது மக்களுக்கு அளித்த பிர தான வாக்குறுதி, ஜே.ஆரின் அரசி யலமைப்பை இல்லாமலாக்குவதா கும். 2005 இல் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவாகும்போதும் இந்த வாக்குறுதியை வழங்கியிருந் தார்.

ஆனால் 2010இல் 18ஆம் திருத்த த்தை கொண்டுவந்து, நிறைவேற்று அதிகாரத்தை மேலும் அதிகரித் துக்கொண்டார். ஆனால் நாங்கள் 19ஆம் திருத்தத்தை கொண்டுவந்து அதிகார பரவலாக்கலை ஏற்படுத்தினோம்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை பாராளுமன்றத்துக்கு பெற்றுக்கொடுத்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி இருக் கின்றோம்.

அவ்வாறு இருக்கையிலேயே தற் போது 20ஆவது திருத்தத்தை கொண்டு வந்து பாராளுமன்றத்தில் பிரதமருக்கு இருக்கும் அதிகாரம் இல்லாமலாக்கப் பட்டு மீண்டும் நிறைவேற்று அதிகா ரத்தை ஜனாதிபதிக்கு கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாங்கள் 20ஆம் திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பது எங்களுடைய தேவைக்கு மாத்திரமல்ல, அரசாங் கத்தின் அதிகாரத்தையும் பாதுகாப்பதற் காகும்.

அதனால் நாட்டின் ஜனநாயகம் மற்றும் பாராளுமன்றத்தின் இறையா ண்மைக்கு எதிரான 20ஆவது திருத் தத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பது அனை வரதும் கடமையாகும். அத்துடன் 20 ஆவது திருத்தம் தொடர்பில் பிரதமர் தனது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என அவர் தெரி வித்தார். (ஜ-4)

## பாடசாலைகளுக்கு ‘ரப்’ வழங்க கல்வியமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

தேசிய மற்றும் மாகாண மட்ட பாட சாலைகளுக்கு ரப் வழங்கும் செயற்றிட் டத்தை நடைமுறைப்படுத்த கல்வி அமை ச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தால் முன்மொழி யப்பட்ட இந்த திட்டத்தின் அடிப்படையில் தற்போது 96 ஆயிரத்து 919 ரப் உபக ரணங்கள் உற்பத்தி செய்யப்பட்ட நிலை யில் காணப்படுகின்றன.

இதன் காரணமாக, குறித்த ரப்பை ஒரே தடவையில் கொள்வனவு செய்து, அவற்றை மாணவர்களுக்கு பகிர்ந்தளி க்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அத்துடன், இதற்கான அமைச்சர வைப் பத்திரத்தை சமர்ப்பித்து அமைச் சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும் கல்வி அமைச்சு திட்டமிட் டுள்ளது.

மேலும், இந்த நடவடிக்கைக்காக 3 ஆயிரத்து 9 மில்லியன் ரூபா நிதி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள தாகவும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டி யுள்ளது. (ஜ-4)

## ஜீவனுக்கு புதிய பதவி



(கண்டி)

பெருந்தோட்ட சேவையாளர் காங் கிரஸின் தலைவராக இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இ.தொ.கா. தலைமையகமான சௌமிய பவனில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பெருந் தோட்ட சேவையாளர் காங்கிரஸ் நிர் வாகக்குழு கூட்டத்தின்போதே இந்நிய மனம் வழங்கப்பட்டுள்ளது.

“பெருந்தோட்ட சேவையாளர்கள் இன்று தோட்டங்களின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் பாடுபடுகின்றனர். இவர்களது வாழ்வு செழிப்பாக உயர வழிவகைகள் செய்து கொடுக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாய தேவை யாகும்.

எதிர்காலத்தில் தோட்டச் சேவையா ளர்களின் அனைத்துப் பிரச்சினைக ளுக்கும் தீர்வு காணப்படும்” என இதன்போது ஜீவன் தொண்டமான் இதன்போது தெரிவித்துள்ளார்.

நடப்பு வருட நிர்வாக சபைக்கு புதிய நிர்வாக தெரிவுகளில் தலைவராக ஜீவன் தொண்டமான், பொதுச் செய லாளராக பொன்னையா சிவராஜா ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 11 செவ் 12 இல்
உயரம்: 178cm
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. நகைக்கடை ஊழியர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11212

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா: 49 ½ செவ் 7 இல்
உயரம்:5’6”
தகைமை/தொழில் க.பொ.தசாத கடை.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11213

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: சூரி,செவ் 8 இல்
உயரம்: 5’5”
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. ஜேர்மனியில். வேலை செய்கின்றார்.
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11214

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: புனாபூசம் 1
கி.பா: 30 ½ சூரி,செவ் 3 ல்
தகைமை/தொழில் பட்டதாரி. ஆசிரியர்.
எதிர்பார்ப்பு: பட்டதாரி. தகுந்த அரச, தனியார் உத்தியோகம் உள்ளவர்கள்
தொ.இ: B/11215

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: சூரி,செவ் 3 ல்
உயரம்: 159cm
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/11241

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5’2”
தகைமை/தொழில்: பல்கலைக்கழக மாணவி.
எதிர்பார்ப்பு: பொறியியலாளர், வைத்தியர், விரிவுரையாளர், வங்கியாளர் போன்றோர்.
தொ.இ: G/11247

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: சூரி,செவ் 6 இல்
உயரம்: 5’2”
தகைமை/தொழில்: ACCA, BSE. Finance Accounts (Private)
எதிர்பார்ப்பு: பட்டதாரி. வெளிநாடு மட்டும்
தொ.இ: G/11249

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 3
கி.பா: 51 செவ் 11 இல்
உயரம்: 168cm
தகைமை/தொழில்: HND in Cosmetology. உதவி விரிவுரையாளர்.
எதிர்பார்ப்பு:. அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/11250

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில் கிழக்குப் பகுதியில் குடிநீர் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கோணாவில் கிழக்குப்பகுதியில் தற்போது குடிநீருக்கான நெருக்கடி காணப்படுகின்றது.

அப்பகுதியில் குடிநீர் விநியோகம்இடம்பெறுகின்ற போதும், போதியளவு குடிநீர் கிடைப்பதில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கிராமத்தில் காணப்படுகின்ற கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுகின்றது. இதனைவிட அந்தப்பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளும் பழுதடைந்து காணப்படுகின்றன.

இதனால் அங்குள்ள மக்கள் குடிநீரையும் இதர தேவைகளுக்கான நீரையும் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக அங்கிருந்து தண்ணீரைப் பெறுவதற்கு அயல் கிராமங்களுக்குச் செல்ல வேண்டியதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே பழுதடைந்த குழாய்கள் கிணறுகளைப் புனரமைத்துத் தருமாறும் தற்போது வழங்குகின்ற குடிநீரின் அளவை அதிகரித்துத்தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மீள்குடியேற்றத்தின் பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் ஏனைய அரச அமைப்புக்களாலும் இந்தப் பிரதேசத்தின் தேவைகள் கருதி அமைக்கப்பட்ட கிணறுகள் அனைத்துமே நீர் இன்றிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-315)

# 46 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவரும் அதே பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவரும் ஜெயபுரம் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இரு நபர்களிடம் இருந்தும் சுமார் 46 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இன்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜெயபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (5-4-316)

# சர்வதேச கரையோர தூய்மையாக்கல் தினத்தை முன்னிட்டு மன்னார் கீரி கடற்கரையில் சிரமதானம்



(மன்னார்)

சர்வதேச கரையோர தூய்மையாக்கல் தினத்தினை முன்னிட்டு மன்னார் மாவட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட செயலகத்தின் அனுசரணையில் மன்னார் கீரி கடற்கரை பகுதியில் நேற்று புதன் கிழமை தூய்மைப்பணி இடம் பெற்றது.

இதன் போது மாவட்ட கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஆகியன இணைந்து கீரி கடற்கரையினை தூய்மையாக்கும் செயற்றிட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பொலிஸார், இராணுவம், கடற்படை, விமானப் படையினர் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளர்கள் ஆகியோர் இணைந்து சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

இதன்போது மன்னார் பிரதேச செயலாளர், மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டு கரையோர தூய்மையாக்கல் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-285)

# வன்னிக்கான புதிய பொலிஸ்மா அதிபராக லால் செனவிரத்ன நியமனம்



(நெளுக்குளம்)

வன்னி மாவட்டத்திற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபராக லால் செனவிரத்ன நேற்று தனது கடைமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

வன்னி மாவட்டத்தின் பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய தம்மிக்க பிரியந்த களுத்துறை பகுதிக்கு மாற்றலாகி சென்ற நிலையில் புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக லால் செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பதவி ஏற்பு நிகழ்வு கண்டி வீதியில் அமைந்துள்ள பொலிஸ்மா அதிபரின் காரியாலயத்தில் அணி வகுப்பு மரியாதையுடன் இடம் பெற்றது.

நிகழ்வில் பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸ லால் சில்வா, உதவி பொலிஸ் அத்தியட்சகர் மல்வலகே,தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மானவடு மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (5-4-299)

# 724 கிலோ கடல் அட்டை பொலிஸாரால் மீட்பு



(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட எருக்கலம்பிட்டி பகுதியில் அனுமதிப் பத்திரட் இன்றி கடல் அட்டைகள் உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரை நேற்று புதன்கிழமை மன்னார் பொலிஸாரால் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டுல வீரசிங்கவின் பணிப்பில் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிருஸாந்தன் தலைமையிலான ஊழல் தடுப்பு பிரிவினரே மேற்படி அனுமதிப் பத்திரம் இன்றி 724 கிலோ 500 கிராம் கடலட்டைகளை உடைமையில் வைத்திருந்த நபரை கைது செய்துள்ளனர்.

மேற்படி கைது செய்யப்பட்ட நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கடலட்டைகள் மன்னார் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசார்ணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கடலட்டைகளின் பெறுமதி 50 இலட்சம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. (5-4-285)

# போக்குவரத்து வசதி செய்து தருமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு அம்பாள்புரம், ஆறாம்கட்டை ஆகிய பகுதிகளுக்கான உரிய போக்குவரத்து வசதிகள் இதுவரை செய்து கொடுக்கப்படாத நிலையில் மாணவர்கள் காலையிலும் மாலையிலுமாக பல கிலோமீற்றர் தூரம் கால்நடையாக பாடசாலைக்கு செல்கின்ற பரிதாபகரான நிலை சுமார் பத்து ஆண்டுகளாக தொடர்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட மிகவும் பின்தங்கிய பகுதியாக காணப்படுகின்ற அம்பாள்புரம், ஆறாம்கட்டை, கொல்லவிளாங்குளம் ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்து வசதியின்மை பிரதான வீதி புனரமைக்கப்படாமை என்பவற்றால் இப்பகுதிகளில் உள்ள பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் தொடர்ந்தும் பல்வேறு கஷ்டங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

எனவே தமக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு இப்பகுதி பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளன்ர். (5-315)





**வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து 2020 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழாவை நேற்று முன்தினம் நடத்தின. பிரதேச செயலாளரும் கலாசார பேரவையின் தலைவருமான செல்வி றஞ்சனா நவரத்தினம் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க. விமலநாதனும் சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச செயலாளர் ம.ஜெகூ, முல்லைத்தீவு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ந.சுதாகரன் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள், மதத்தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.**

**(படங்கள்:- கண்டாவளை செய்தியாளர்)**

# இராசிபலன்

**24.09.2020**
**புரட்டாதி 08, வியாழக்கிழமை**
**அட்டமி பின்னிரவு 12.19 மணிவரை**
**மூலம் முன்னிரவு 11.54 மணிவரை**
**சுபநேரம் 7.32-9.02 மணிவரை**
**இராகுகாலம் 1.32-3.02 மணிவரை**
**சந்திராஷ்டமம் -கார்த்திகை, ரோகினி**

வளவன்

**மேஷம்**: வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்**: குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், திடீர் விரயங்கள் ஏற்படலாம், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.

**மிதுனம்**: ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**கடகம்**: பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், உறவினர் வருகையால் உற்சாகம் கூடும் நாள், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்**: பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கன்னி**: கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், விரத வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்**: சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்**: வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கூடும்நாள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு**: சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.

**மகரம்**: குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்**: எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

**மீனம்**: தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**உன் புலன்களை மதித்து நட அவை உன்னை மதித்து நடக்கும்**

# ஆசிரிய உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க கோரிக்கை




(கொழும்பு)

உரிய தகைமையை பூர்த்தி செய்துகொண்டுள்ள ஆசிரிய உதவியாளர்கள், ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் கோரிக்கை விடுத்துள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் ஆசிரிய உதவியாள்ர் நியமனம் தொடர்பில் பிரேரணையொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிலையில், குறித்த ஆசிரிய உதவியாளர்கள் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள போதிலும் முழுமையான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் இங்கு சுட்டிக்காட்டினார். (2-7)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மகிழ்ச்சி தருகிறது

## பேராயர் பெருமிதம்




(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மகிழ்ச்சி அளிப்பதாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பெருமிதம் அடைந்துள்ளார்.**

கொழும்பு பௌத்த மஹா சம்மேளனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் போது ஊடகவியலாளரின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கேள்வி, பதில் வருமாறு,

**கேள்வி** நியாயம் கிடைக்கும் என நீங்கள் நம்புகிறீர்களா?


பதில் - நான் நம்புகிறேன். அவர்கள் நேர்மையாக இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதை காணக்கூடியதாய் உள்ளது.

**கேள்வி** ஆணைக்குழு தொடர்பில் உங்கள் கருத்து?

பதில் - இல்லை. ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவரும் வரையில் காத்திருக்கிறோம்.

அறிக்கையின் பின்னர் தான் எமது கருத்தை தெரிவிப்போம். இருந்த போதிலும் தற்போது ஆணைக் குழுவின் செயற்பாடுகள் மிக்க மகிழ்ச்சியளிக்கிறது என்று தெரிவித்தார். (ஜ-4)

# இரு வேறு இடங்களில் துப்பாக்கி, கத்திகள் மீட்பு



(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இரு வேறு இடங்களில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கைகளின் போது துப்பாக்கி உட்பட தடை செய்யப்பட்ட கத்திகள் மீட்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லிரைச்சல் கிழக்கு சலாம் பள்ளி பகுதியில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினருக்கு நேற்று முன்தினம் முற்பகல் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய உரைப்பை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டு புதைக்கப்பட்டிருந்த சொட்கண் துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள், கத்தி என்பன மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிறீன் பீல்ட் பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கத்திகள் இரண்டு மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபரை கல்முனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-4)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு



26

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

ஒவ்வோராண்டு முடிவிலும் அரசிறை, செலவின மொத்தங்கள், ஆண்டுக்குரிய ஐந்தொகை எழுதப்பட்டு, வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு முன்பு மிகைபாடு, குறைப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 167)

(i) ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் வருமதி, கொடுப்பனவுப் பற்றுச் சீட்டுக்கள், வகைப்படுத்திய கூற்று என்பவற்றுடன் முன்னைய ஆண்டுக்கால பிரித்தெடுத்த கணக்குப் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபருக்குத் தவிசாளரால் அனுப்பப்படல் வேண்டும். (ii) பிரித்தெடுத்த கணக்குகளின் பிரதிகள் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பப்படல் வேண்டும். (ஏற்பாடு/ஒழுங்கு விதி 168).

### அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் முறைகள்

1. கட்டட அனுமதிப்பத்திரங்கள்

பிரதேசசபை தனது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள அனைத்து கட்டட செயற்பாடுகளையும் கட்டுபடுத்தி ஒழுங்கமைக்கின்றது. ஆகவே கட்டடம் கட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அனைவரும் சம்பந்தப்பட்ட பிரதேச சபையிடமிருந்து கட்டட அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

### சட்ட அதிகாரம்

1. ஒரு பிரதேசசபை நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பகுதியின் கீழ் நகர அபிவிருத்திச் சட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டால் 1978 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 41 ஆவது சரத்தின் உடைய பகுதி IIA பொருத்தமுடையதாக அமையும்.

2. 1986.03.10 ஆம் திகதி 392/9ஆம் இலக்க வர்த்தமானியில் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் அமைச்சரால் அமுல்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகள்.

3. ஒரு பிரதேசம் நகர அபிவிருத்திப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படாவிட்டால் 1915 ஆம் ஆண்டு வீட்டு நகர வளர்ச்சி சட்டம் பொருத்தமுடையதாக அமையும்.

ஒரு கட்டட அனுமதிப்பத்திரத்தின் உடைய செல்லுபடித்தன்மை.

கட்டட அனுமதிப்பத்திரம் ஒரு வருடத்திற்கு மாத்திரமே செல்லுபடியாகும். நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்ட 1978 ஆம் ஆண்டு 41 இலக்கச் சட்ட 10(06) ஒழுங்கு விதிகளின்படி இரண்டு ஆண்டுகளுக்கு அனுமதிப்பத்திரம் நீடிக்கப்பட முடியும்.

### தகைமை

1. வியாபாரச் செயற்பாடுகள் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்திருக்க வேண்டும்.

2. பிரதேச சபையின் உட்பட்ட பிரதேசத்தினுள் உள்ள அசையா சொத்தின் உடைய ஒரு உரிமையாளராக அல்லது ஒரு குத்தகைக்காரராக இருக்க வேண்டும். இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் விண்ணப்பம் உரிமையாளரால் கைச்சாத்திடப்பட வேண்டும்.

3. விண்ணப்பிக்கும் நபரின் பெயர் பிரதேசசபையின் மதிப்பீட்டு வரி பதி வேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. கட்டடம் அமையவிருக்கின்ற காணி பிரதேச சபையால் வரையறை செய்யப்பட்ட ஆகக் குறைந்த காணித் தொகையை விட கூடுதலாக இருக்க வேண்டும்.

### தேவைப்படும் ஆவணங்கள்

(பின்வரும் ஆவணங்களின் மூன்று பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

1. கட்டடச் செயற்பாடு நடைபெறும் காணி மற்றும் அதற்கண்மித்த வீதிகளின் வரைபடம்.

2. காணி உட்பிரிவாக்கப்பட்டிருந்தால் 1:4000 என்ற அளவீட்டுக்கு குறையாமல் வரையப்பட்ட காணி உட்பிரிவுக்குரிய அனுமதி வழங்கப்பட்ட பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டும் வரைபடம்.

- புவியியல் அம்சங்கள்
- சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள கட்டடங்கள்
- பிரதேசத்தில் உள்ள பாதையின் அகலம்

3. 1:1000 என்ற அளவுத் திட்டத்திற்கு குறையாமல் வரையப்படும் பின்வருவனவற்றைக் காட்டும் உத்தேச கட்டடத்தின் விரிவான கட்டட வரைபடம்.

- ஏற்கனவே அங்கு அமைந்துள்ள கட்டடங்கள்
- ஏதாவது வீதி ஒழுங்குகள் திருத்தியமைக்கப்பட இருந்தால் அவை பற்றிய விபரம்.
- காணியின் உடைய எல்லை
- உள்ளக வீதிகள்
- வாகனத் தரிப்பிட பிரதேசங்கள்

4. கட்டட நிர்மாணச் செயற்பாடு நடைபெறும் நிலத்தின் உரிய நொத்தாரிசின் உடைய நில உறுதிப்பத்திரம்.

5. 1:100 என்ற அளவுத்திட்டத்திற்கமைய வரையப்பட்டு கட்டடத்தின் உடைய பகுதியையும் காட்டும் வரைபடம் (கட்டடத்தின் உடைய கட்டடங்களைப் பொறுத்து இது 1:200 என்ற அளவுத்திட்டத்தின் அடிப்படையில் வரையப்பட முடியும்). கட்டட வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற விடயங்கள்.

- கட்டடத்தில் உள்ள ஒவ்வொரு அறையினது நோக்கமும் அந்த ஒவ்வொரு அறையினதும் நீள அகலம்.
- கட்டடத்தில் உள்ள கதவுகள், ஜன்னல்கள், திறந்த பகுதிகள் அவற்றின் உடைய நீளமும் அகலமும்.
- மலசலகூடங்கள்/ இணைப்புக்கள்/ வடிகாலமைப்பு என்பனவற்றின் அமைவிடம்.
- தீயணைப்புக்கருவி (வர்த்தக கட்டடங்கள்).
- உத்தேச கட்டடத்தின் ஊடாகச் செல்லும் மின்சார வயர்களை காட்டுதல்.
- சுவர்கள், தரை, கூரை, உபயோகிக்கப்படும் பொருட்கள், அப்பொருட்கள் பற்றிய குறிப்பான விபரங்கள்.
- கட்டடத்தின் உடைய சுவர்கள், முன்வளைகள், வளை மற்றும் ஏனைய பகுதிகளுடைய பருமனைக்காட்டும் கட்டடத்தின் குறுக்கு வெட்டுமுகத் தோற்றம்.
- ஒவ்வொரு சுவரினதும் உயரம்
- கட்டடம் அமைந்துள்ள காணியின் எல்லைக்கும் கட்டட வெளிச்சுவர்களுக்கும் இடையே உள்ள தூரம்.

கட்டடம் ஒரு சினிமா அரங்கு அல்லது தியேட்டர் ஆக இருந்தால் பின்வரும் மேலதிக விபரங்கள் கட்டட வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

- நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுங்குவிதிகள், சட்டதிட்டங்களுக்கேற்ப வரையப்பட்ட கட்டட வரைபடம்.
- ஸ்தாபிக்கப்பட உள்ள வடிகால்களின் குறுக்கு வெட்டுத் தோற்றமும் அவைகளுடைய நீளமும் எல்லா மாடிப்படிகளின் அகலமும் கட்டடத்தில் உள்ள மாடிப்படிகளின் எண்ணிக்கையும்.
- கதவுகளுடைய அகலம்
- கட்டடத்தின் உடைய உயரம்
- கட்டடத்தின் ஒவ்வொரு பிரிவிலும் அமர்ந்திருக்கக் கூடியவர்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு தனியாளினதும் ஆசன இருக்கை தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள இடஅளவு.
- தீ பரவாமல் தடுப்பதற்கான வழிமுறைகள்.
- திரைப்பட உபகரணங்கள் சம்பந்தமாக தீ பரவாமல் தடுப்பதற்கான வழிமுறைகள்.
- காற்றோட்ட வசதி
- உட்செல்கை, வெளிச்செல்கை என்பனவற்றைக் காட்டுதல்.

6. மலசலகூடங்கள், மலசலக்குழிகள் என்பவற்றைக் காட்டும் வரைபடம்.

7. உத்தேச காணி ஒரு நெற்காணியாக இருந்தால் கமநல சேவைகள் திணைக்களத்தின் இக்காணியை நிரப்புவதற்கு வழங்கப்பட்ட அனுமதிக்கான அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**குறிப்பு**

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குட்பட்ட வீதிக்கு அண்மையில் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உடைய அனுமதியையைப்பெற வேண்டும்.

2. ஆற்றங்கரைக்கு அருகில் ஆற்றில் இருந்து 100 மீற்றர் எல்லையினுள் ஒரு கட்டடம் நிர்மாணிக்கப்பட்டால் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் உடைய அனுமதியைப் பெற வேண்டும்.

3. கரையோர எல்லைக்குள் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டால் கரையோரப் பாதுகாப்பு அதிகார சபையிடம் இருந்து அனுமதி பெறப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவக் கட்டணம் 500 ரூபா (பிரதேச சபைகளுக்கிடையே வேறுபடலாம்). செய்முறைப்படுத்தும் கட்டணங்கள் பாவனை மற்றும் பாவிக்கப்படும் தரைப்பகுதியைப் பொறுத்து வேறுபடும்.

### 2. இறைச்சிக்கடை அனுமதிப்பத்திரம்

தனது மேற்பார்வையின் ஊடாக பிரதேச சபை இறைச்சிக்கடைகளையும் இறைச்சி வெட்டுமிடங்கள் மீது கட்டுப்பாட்டையும் மேற்பார்வையையும் பிரயோகிக்கின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இறைச்சிக்கடைகள் பிரதேச சபையால் வருடாந்தம் ஏல விற்பனையிடப்படுகின்றன.

### சட்ட அதிகாரம்

- 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் உடைய 102 வது பிரிவு.
- இறைச்சிக் கடைச்சட்டம்
- 1988.08.23 520/7 ம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட (32ம் இலக்க iv பகுதி அத்தியாயம் துணைச் சட்டங்கள்.

### தகைமை

பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியினுள் இறைச்சிக்காக வெட்டப்படுகின்ற அல்லது இறைச்சிக்கடைகளின் உரிமையாளராக அல்லது எதிர்காலத்தில் உரிமையாளராகக் கூடிய ஒருவராக இருக்க வேண்டும். பிரதேசசபையால் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணம் அறவிடப்படும்.

### தேவையான ஆவணங்கள்

இறைச்சிக்கடை அமைக்கப்படவுள்ள இடத்தின் உரிமையாளரிடமிருந்தான கடிதம்.

இறைச்சிக்கடை அனுமதிக்கான விண்ணபத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

- விண்ணபதாரியின் உடைய பெயர்
- விண்ணபதாரியின் முகவரி
- இறைச்சிக் கடை ஸ்தாபிக்கப்பட இருக்கின்ற இடத்தின் உடைய முகவரி

குறிப்பு:- வருடாந்த அனுமதிப்பத்திரம் தொடர்பாக ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்படாதவிடத்து 14 நாட்களுக்குரிய ஒரு தற்காலிக அனுமதிப்பத்திரம் பிரதேச சபையிடமிருந்து பெறப்பட முடியும்.

### 3. இணக்கச் சான்றிதழ்

அனுமதியளிக்கப்பட்ட கட்டட வரைபடத்திற்கமைய கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதைச் உறுதிப்படுத்துவதற்காக இந்த இணக்கச் சான்றிதழ் விநியோகிக்கப்படுகிறது. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு பாவிக்கப்படும் முன்னர் இச்சான்றிதழ் பிரதேசசபையில் இருந்து பெறப்படல் வேண்டும்.

### சட்ட அதிகாரம்

அமைச்சர் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை அபிவிருத்திப் பிரதேசமாக பிரகடனப்படுத்தினால் பின்வரும் சட்ட வழிவகைகள் பொருந்தும்

I. 1978ம் ஆண்டு 8ம் பகுதி (K) நகர சபைச் சட்டம்

II. 1986.03.10 அன்று பிரசுரிக்கப்பட்ட 392/2 வர்த்தமானியின் 1978 ஆம் ஆண்டு 41 ஆவது இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட 67 ஆவது சட்ட விதி


(தொடரும்...)

# நாட்டில் தொடரும் சீரற்ற வானிலை

## ❖14 வீடுகள் பாதிப்பு
## ❖74பேர் இடப்பெயர்வு

(கொழும்பு)

**நாட்டில் தொடரும் அடை மழை மற்றும் பலத்த காற்று வீசியதன் காரணமாக கினிகத்தேனை, கெனில்வத்த தோட்டப் பகுதியில் 14 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.**



ஒரு குடியிருப்பு மீது பலா மரம் ஒன்று விழுந்ததில் 14 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 14 குடியிருப்புகளில் வசித்து வந்த 74 பேர் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. பாதிக்கப்பட்ட 14 குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு தோட்ட நிர்வாகத்தினால் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பாதிப்புக்குள்ளாகிய குடியிருப்புகளை சீர் செய்வதற்காக இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் பணிப்புரைக்கு அமைய லக்ஷபான இராணுவ முகாமின் உத்தியோகத்தர் தலைமையில் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளை சீர் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மாசடையும் கடற்கரைகள் நீதிமன்றில் மனுத்தாக்கல்



(கொழும்பு)

நாட்டை சூழவுள்ள கடற்கரைகள் மாசடைவதை தடுக்கும் வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு அரசாங்கத்திற்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை நவம்பர் மாதம் 12 ஆம் திகதி அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுற்றுச்சூழல் நீதி மையத்தினால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த மனு நேற்று முன்தினம் மேன்முறையீட்டு தலைமை நீதிபதி ஏ.எம்.எம்.டி. நவாஸ் மற்றும் சோஹித ராஜ கருணா ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் ஆராயப்பட்டது.

இதன்போது, மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுச்சூழல் துறை அமைச்சர், மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் கடலோர பாதுகாப்புத் திணைக்களத் திற்கு மீண்டும் அழைப்பாணை வெளியிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஜ-4)

# ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பரீட்சைப் பெறுபேறுகள் வெளியீடு

(கொழும்பு)

கடந்த 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இறுதிப்பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, பரீட்சையில் தோற்றியிருந்த 966 பேரின் பெறுபேறுகளே இவ்வாறு வெளியாகியுள்ளன.

குறித்த பெறுபேறுகளை **www.doenets.lk** அல்லது **www.results.exams.gov.lk** என்ற இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். (ஜ-4)



# பசுவதைத் தடைச்சட்டம் இன்னும் தாமதமாகலாம்


(கொழும்பு)

இறைச்சிக்காக மாடுகளை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ள போதிலும் இந்த தீர்மானம் அமுல்படுத்துவது இன்னும் தாமதமாகும் என்று தெரிய வந்துள்ளது.

மேற்படி தீர்மானம் எடுத்த நிலையில், அதற்கான சட்ட வரைபு இதுவரை தயாரிக்கப்படவில்லை என்றும், அமைச்சரவையில் இதுபற்றி இன்னும் பேசப்படவில்லை எனவும் உள்ளகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் நடந்த ஆளுங்கட்சி கூட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் இந்த தீர்மானம் முன்வைக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இருப்பினும் ஒருமாத காலத்திற்கு இந்த தீர்மானம் ஒத்தி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-6)




# மதகுருமார்களை நாங்கள் மதிக்கின்றோம் அதற்கேற்ப அவர்களும் செயற்பட வேண்டும்

## தேரரின் அடாவடித்தனம் குறித்து சாணக்கியன்

(கொழும்பு)

அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு, அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்க பீடாதிபதிகள் புனர்வாழ்வளிக்க வேண்டும் என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உரையாற்றிய போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், " மட்டக்களப்பு மாவட்டத்தில் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் என்ற ஒரு தேரரின் அடாவடித்தனத்தினைப்பற்றி இந்த இடத்தில் சில வார்த்தைகளை சொல்லத் தான் வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தினைச் சேர்ந்த ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய கட்சியினைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சபையில் இந்த விகாராதிபதிக்கு எதிராக உங்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பியுள்ள மக்களுக்காக பேசவேண்டும் என்ற, ஒரு விநயமான கோரிக்கையினை முன்வைக்க விரும்புகின்றேன்.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு செங்கலடி பகுதியில் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் நடந்து கொண்ட விதம் தொடர்பாக திருப்தியடைய முடியாது.

அவர் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் தொனியில் நடந்து கொண்டுள்ளார். அவர் அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார்.

பொலிஸாரை, கிராம உத்தியோகத்தரை, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை வீதிக்கு வருமாறு அச்சுறுத்தல் விடுத்த அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

அவருக்கு எதிராக இது வரையில் சரியான முறையில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதுகுறித்து நான் பொலிஸ்மா அதிபர், பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்ல விரும்புகின்றேன்.

அத்துடன், அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்க பீடாதிபதிகள் இணைந்து புனர்வாழ்வளிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

நாங்கள் மதகுருமாரை மதிக்கின்றோம். நாங்கள் அவர்களை மதிக்கும் அளவிற்கு அவர்களும் நடந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (2-7)

# பாரதம்

## பிரான்ஸில் இருந்து சென்னைக்கு போதை மாத்திரைகள்

(சென்னை)

பிரான்ஸ் நாட்டிலிருந்து சென்னைக்கு கடத்தி வரப்பட்ட ரூ.4 இலட்சம் மதிப்புள்ள போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

வெளிநாடுகளில் இருந்து கடத்தி வரும் போதை பொருட்களை கல்லூரி மாணவர்கள், வசதி படைத்த இளைஞர்களுக்கு ரூ.5 ஆயிரம் முதல் ரூ.50 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுவதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக சுங்க இலாகா அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (2)

## ஐ.நா.ஊழியர்களுக்கு தடுப்பூசி இலவசம்

### புடின் அதிரடி



(மொஸ்கோ)

ஐக்கிய நாடுகள் சபை ஊழியர்கள் எங்கள் ஸ்புட்னிக் வி கொரோனா தடுப்பூசியை இலவசமாக செலுத்திக்கொள்ளலாம் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

மருத்துவர்களின் அறிவியல், தொழில்துறை மற்றும் பரிசோதனை அனுபவங்களின் மூலம் கொரோனா வைரஸை கண்டறிந்து சிகிச்சையளிக்க பலவிதமான சோதனை முறைகள் மற்றும் மருந்துகளை ரஷ்யா உருவாக்கியுள்ளது, மேலும், உலகின் முதல் கொரோனா தடுப்பூசியாக ஸ்புட்னிக் வி பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்புட்னிக்-வி கொரோனாத் தடுப்பூசியை உலக நாடுகளுக்கு வழங்கவும் கொரோனா தடுப்பூசி தொடர்பான எங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் தடுப்பூசி குறித்த ஒத்துழைப்பைத் தொடர்ந்து வழங்கவும் நாங்கள் தயாராக உள்ளோம்.

மற்றவர்களுக்கு பரவியது போன்றே பல்வேறு பகுதிகளில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஊழியர்களும் அதன் தலைமையிடத்தில் இருக்கும் ஊழியர்களுக்கும் கொரோனா வைரஸ் பரவியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கு கொரோனா வைரஸ் தடுப்பு தொடர்பாக தேவையான உதவிகளைச் செய்ய ரஷ்யா தயாராக உள்ளது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலக ஊழியர்கள் விருப்பத்தின் பெயரில் வந்தால் அவர்களுக்கு எங்கள் ஸ்புட்னிக்-வி கொரோனா தடுப்பூசியை எந்த ஒரு கட்டணமும் வசூலிக்காமல் இலவசமாக வழங்க நாங்கள் தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## உலகம் முழுவதையும் தன் க

## முதல் முறையாக ஒருவார

(ஜெனிவா)


**உலக அளவில் கடந்த 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வ**
**மட்டும் சுமார் 20 இலட்சம் பேர் புதிதாகக் கொரோனாத் தொ**
**இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் அதிர்ச்சித் தகவல் வெ**

சீனாவில் கடந்த ஆண்டு இறுதியில்தோன்றிய கொரோனா வைரஸ் கடந்த 9 மாதங்களாக உலகம் முழுவதும் வேகமாக பரவி வருகிறது.

இதற்கு எதிரான தடுப்பு மருந்துகள் இன்னும் தயாராகவில்லை என்பதால், வைரஸின் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

இதனால் நாளுக்கு நாள் தொற்றுக்கு ஆளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

அந்த வகையில் கடந்த 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை



## பயங்கரவாதத்தின் பிறப்பிடம் பாகிஸ்தான்

### ஐ.நாவில் இந்தியா கொதிப்பு

(ஜெனிவா)

பயங்கரவாதத்தின் பிறப்பிடமாக உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட நாடு பாகிஸ்தான் என ஐ.நா.கூட்டத்தில் இந்தியா தெரிவித்துள்ளது.

ஐ.நா.உயர்நிலை கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் ஜம்மு - காஷ்மீர் குறித்த பிரச்சினையை எழுப்பியிருந்தது. தங்களுடைய சுயநிர்ணய உரிமையை ஐ.நா.பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில் ஜம்மு - காஷ்மீர் மக்கள் இன்னும் காத்திருக்கினர் எனப் பாகிஸ்தான் குறிப்பிட்டிருந்தது.


இதற்குப் பதிலளித்து இந்தியா சார்பில் உரையாற்றிய இந்திய தூதரகத்தின் முதல் செயலர் விதிஷா மித்ரா மேற்படி தெரிவித்துள்ளார். இதன் போது தொடர்ந்து தெரிவித்த அவர், "ஐ.நா.சபையில் மீண்டும் மீண்டும் ஆதாரமற்ற பொய்களையே பாகிஸ்தான் கூறி வருகிறது. பொய்யுரையே பாகிஸ்தானின் முத்திரையாகவும் இப்போது மாறியிருக்கிறது.

ஜம்மு-காஷ்மீர் இந்தியாவின் ஓர் அங்கம். ஜம்மு-காஷ்மீர் விவகாரங்கள் இந்தியாவின் உள்நாட்டு விவகாரம். எனவே ஜம்மு -காஷ்மீர் குறித்த பாகிஸ்தானின் கூற்றை இந்தியா முழுமையாக நிராகரிக்கிறது.

ஐ.நா.சபையில் தர்க்கப்படாத ஒரு தீர்மானம் இருக்கும் என்றால் அது பயங்கரவாதம் மற்றும் அதன் பிறப்பிடமாக இருக்கும் பாகிஸ்தானை சமாளிப்பதற்கான தீர்வு காண்பதாகத்தான் இருக்கும். பயங்கரவாதத்தின் பிறப்பிடம் பாகிஸ்தான் என்பது உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. பயங்கரவாதிகளுக்கு அந்த நாடு பயிற்சி அளிப்பதோடு அவர்களைத் தியாகிகளாகவும் பாராட்டி வருகிறது.

ஐ.நா.சபையைத் திசை திருப்பவும் ஐ.நாவைத் தவறாகப் பயன்படுத்தும் நோக்கத்தோடு இந்தப் பொய் குற்றச்சாட்டை பாகிஸ்தான் தொடர்ந்து முன் வைத்து வருகிறது" எனத் தெரிவித்துள்ளார். (2-7)

## லெபனானில் மீன்



(பெய்ரூட்)

தெற்கு லெபனானில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஷியா முஸ்

# வெளிநாடு

# கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கொரோனா

# ரத்தில் 20 இலட்சம் பேருக்குத் தொற்று!

## உலக சுகாதார நிறுவனம் அதிர்ச்சித் தகவல்

**தி வரை ஒரு வாரத்தில் தொற்றுக்கு ஆளாகி வெளியிட்டு உள்ளது.**

யிலான ஒரு வாரத்தில் மட்டும் உலக அளவில் சுமார் 20 இலட்சம் பேர் புதிதாக கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் அதிர்ச்சித்தகவல் வெளியிட்டு உள்ளது.

இது கொரோனா கண்டறியப்பட்டது முதல் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகம் எனவும் அந்த அமைப்புக் கூறியுள்ளது.

முந்தைய வாரத்தை ஒப்பிடுகையில் இது 6 சதவீதம் அதிகம் என கூறியுள்ள உலக சுகாதார அமைப்பு, எனினும் இந்த வாரத்தில் மரண எண்ணிக்கை 10 சதவீதம் குறைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

மொத்தத்தில் உலகம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கொரோனாத் தொற்று, மனிதர்களுக்கு தொடர்ந்து சவாலாகவே விளங்கி வருகிறது. (2)





**டுபாயில் வன விலங்குகள் பராமரிக்கப்படும் சபாரி பூங்கா மறுசீரமைப்பு பணிகள் நிறைவடைந்ததால், அடுத்த மாதம் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.வன விலங்குகள் உலாவும் இயற்கை பகுதியாக கடந்த ஆண்டில் உருவாக்கப்பட்ட வன உயிரின பூங்கா டுபாய் சபாரி பூங்காவாகும். இங்கு காட்டில் வாழும் விலங்குகள், பறவைகள் மற்றும் தண்ணீர் வாழ் உயிரினங்கள் என 2 ஆயிரத்து 500 வன விலங்குகள் இயற்கையான சூழலில் நடமாடி வருகிறது.**

**மேலும் கண்ணாடி தடுப்புகள் அமைக்கப்பட்டு அதிலும் ஹைனா, புலி போன்ற விலங்குகளை கண்டு மகிழலாம். இந்த பூங்காவில் சிங்கம், வெள்ளை சிங்கம், புலி, ஒட்டகச்சிவிங்கி, வரிக்குதிரை, பாம்புகள், முதலை, ஆமை, ஓநாய்கள், நெருப்புக்கோழி உட்பட பல்வேறு விலங்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்தந்த விலங்குகளுக்கு ஏற்ப தண்ணீர் நிலைகள், பாறைகள், குகைகள் என அனைத்து வசிக்கும் இடங்களும் மிக இயற்கையாக அமைக்கப்பட்டுள்ளது.**

## முகக்கவசம் அணிய மறுத்ததால் விமானத்தில் செல்ல அனுமதி மறுப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில்விமான பயணத்தின்போது முகக்கவசம் அணிய மறுத்த 2 வயது குழந்தைக்கும் தாய்க்கும் விமானத்தில் பயணிக்க அனுமதி மறுக்கப்பட்ட சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது. ரேச்சல்டேவிஸ் என்ற அமெ ரிக்க பெண் தனது 2 வயது குழந்தையுடன் அமெரிக்க ஏர்லைன்ஸ் விமானத்தில் பயணம் மேற்கொண்ட போது இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

பின்னர் அந்த தாயும் குழந்தையும் மற்றொரு விமானத்தில் ஏறி தங்கள் சொந்த ஊர் திரும்பியதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (2)

## கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோரில் அதிக எண்ணிக்கையை கொண்ட நாடு இந்தியா

(டில்லி)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 2 கோடியே 34 இலட்சமாக அதிகரித்துள்ளது. சீனாவின் ஹூபேய்மாகாணம்வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ்கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 213 நாடுகள்/பிரதேசங்களுக்கு பரவியுள்ள இந்த வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்த கொடிய வைரஸுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் இறுதிகட்டத்தை விஞ்ஞானிகள் எட்டியுள்ளனர். தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கும் இறுதிக் கட்ட முயற்சிகள் ஒரு பக்கம் நடைபெற்று வந்தாலும் மருத்துவத் துறையினரின் தன்னலமற்ற சேவையால் வைரஸ் பாதிப்பில் இருந்து பலர் மீண்டு வந்த வண்ணம் உள்ளனர்.

கொரோனாவில் இருந்து அதிக எண்ணிக்கையில் குணமடைந்தவர்களைக் கொண்ட நாடுகளாக இந்தியா-44,97,868, அமெரிக்கா - 43,43,754, பிரேசில் - 39,45,627, ரஷ்யா - 9,17,949, கொலம்பியா - 6,50,801, பெரு-6,22,418, தென்னாபிரிக்கா - 5,92,904 என வரிசையிடப்பட்டுள்ளது. (2)

## மீண்டும் பாரிய குண்டுவெடிப்பு



லிம் குழுவான ஹெஸ்பொல்லாவின் ஆயுதக் கிடங்கில் பாரிய வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தலைநகர் பெய்ரூட்டுக்கு தெற்கே 50 கி.மீ.தொலைவில் உள்ள தெற்கு கிராமமான ஜன்கானாவில் வெடிப்பு நிகழ்ந்துள்ளது என லெபனானின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான என்.என்.ஏ.அறிவித்துள்ளது. இவ்வெடிப்புச்சம்பவம் ஒரு 'தொழில்நுட்ப பிழையால்' ஏற்பட்டதாகவும் பல சேதங்களை ஏற்படுத்தியதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இருப்பினும் ஹெஸ்பொல்லா அதிகாரிகள் எந்தவிதமான உயிரிழப்புகளையும் உறுதிப்படுத்தவில்லை. (2)

## எந்த நாட்டுடனும் போர் செய்யும் எண்ணம் சீனாவிற்கு இல்லை

### ஜி ஜின்பிங்

(பீஜிங்)

உலகில் எந்தவொரு நாட்டுடனும் போர் செய்யும் எண்ணம் சீனாவுக்கு இல்லை என சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே சீனா விரும்புவதாகவும் அவர் கூறினார்.

எனினும் சில நாடுகள் மோதல்களைத் தூண்ட முற்படுவதாகக் குற்றஞ்சாட்டிய அவர், இவ்வாறான செயல் வரலாற்றின் போக்குக்கு எதிரானது எனக் குற்றஞ்சாட்டினார்.

ஐ.நா.பொதுச் சபையின் 75 ஆவது ஆண்டு கூட்டத்தொடரில் இடம்பெற்ற பொது விவாதத்தில் கடந்த திங்கட்கிழமை இணைய நேரலை வழியில் பேசும்போதே ஜி ஜின்பிங் இவ்வாறு தெரிவித்தார். (2)



# நீர் விநியோகப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு-பிரதமர் நடவடிக்கை



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் காணப் படும் நீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் பொதுவான பொறிமுறையொன்று நிறுவப் படவுள்ளதாக பிரதமர் தெரி வித்தார்.

பிரதமர் அலுவலகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விட யம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இதற்காக பாது காப்பான நீர் தேவையை பூர்த்திசெய்யும் வேலைத் திட்டத் தின் கீழ் அடுத்த வாரமளவில் விசேட குழுவொன்றும் நிய மிக்கப்படவுள்ளது.

வினைத்திறனான தேசிய நீரவள பாதுகாப்பு மற்றும் ஒதுக் கீடுகளின் மூலம் அனைத்து தரப்பினரினதும் நீர் தேவை யைப் பூர்த்தி செய்வதற்காக அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைப்பதே இக்குழுவை நியமிப்பதன் முதன்மையான நோக்கமாகும் என பிரதமர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலவும் நீர் பிரச்சினை களை தீர்ப்பதற்கு பொறுப்புள்ள மற்றும் அதிகாரம் கொண்ட பொதுவான பொறிமுறையொ ன்றை நிறுவுதல், தேசிய நீர் வளங்கள் முகாமைத்துவ செய லாளர் அலுவலகமொன்றை உருவாக்குதல் மற்றும் நீர் விநியோகத்துடன் தொடர் புடைய ஏனைய பிரச்சினை களை முகாமைத்துவம் செய் தல் ஆகிய விடயங்கள் தொடர் பிலும் அவதானம் செலுத்தப்பட் டுள்ளது.

அத்துடன், மேல் மாகாணத் தில் சட்டவிரோத கட்டுமானங் களைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.


மேல் மாகாணத்தில் காணப் படும் சட்டவிரோத கட்டுமானங் களினால் வருடாந்தம் ஏற்படும் வெள்ளப்பெருக்கு பல இலட்சம் ரூபாநட்டம் ஏற்படுவதாகவும்இதே வேளை, அடுத்த வாரம் நியமிக் கப்படவுள்ள புதிய குழு, மாதம் ஒருமுறை கூடவுள்ளதுடன், இதன்மூலம் நீர்விநியோகம் தொடர்பில் காணப்படும் பிரச்சி னைகளைத் தீர்க்கவும் எதிர் பார்க்கப்பட்டுள்ளது. (2-7)

# பருவ மழைக்காலம் ஆரம்பம் டெங்கு அதிகரிக்கும் அபாயம்

## இம்மாதம் 506 நோயாளர்கள் அடையாளம்

(கொழும்பு)

**நாட்டில் பெய்துவரும் மழை காரணமாக நாடளாவிய ரீதியில் டெங்கு நோயாளர் களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் காணப்படுகின்றது என தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு எச்சரித்துள்ளது.**



இந்த மாதத்தில் கடந்த 17 நாட்களில் நாட்டில் 506 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும் எண் ணிக்கையிலானோர் கண்டி மற்றும் கொழும்பு மாவட்டங் களை சேர்ந்தவர்களாவர்.

நாம் இருக்கும் இடத்தை டெங்கு பரவாத வகையில் சுத் தமாக வைத்திருக்கவேண் டும் என்று தொற்றுநோய் விசேட வைத்தியர்கள் பொது மக்களுக்கு அறிவித்துள்ள னர். (2-7)

# ஆனைவிழுந்தான் சரணாலய விவகாரம்; சந்தேக நபர் விளக்கமறியலில்

(கொழும்பு)

ஆனைவிழுந்தான் சரணா லயத்தில் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற் பட்ட குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரை இன்று வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத் தரவிடப்பட்டுள்ளது.

சம்பவத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டியதாகக் கருதப் படும் குறித்த சந்தேக நபரை கைது செய்வதற்கானபியாணை பொலிஸாரினால் பெறப்பட்டி ருந்த நிலையிலேயே அவர் சரணடைந்துள்ளார் இதனை அடு த்து, குறித்த பிரதான சந்தேக நபரை இன்று வரை விளக்க மறி யலில் வைக்குமாறு சிலாபம் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆனைவிழுந்தான் பறவை கள் சரணாலய பகுதியில், சுற் றாடலுக்குப் பாதிப்பை ஏற்படு த்தும் வகையில் மேற்கொள்ளப் பட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு ஐந்து பேர் அடங் கிய குழுவொன்று நியமிக்கப்பட் டிருந்தது.

வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்னாயக்கவினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-7)

# ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது

(கொழும்பு)

அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது.

அதன்படி இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக் கையின் படி ஒரு டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் விற்பனை பெறுமதி 187.54 சதமாக பதிவாகியுள்ளது.

கொரோனாப் பாதிப்பால் அண்மையில் இலங்கை ரூபா ஒன்றின் பெறுமதி வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சிய டைந்து இருந்தது.

எனினும் தற்போது கொரோ னாவின் தாக்கத்திலிருந்து இலங்கை மீண்டு வருவதால் ரூபாவின் பெறுமதியும் உயர் வடைவதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. (2-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## போர் (BORE)

"1946 இலே நான் வெளிநாடு போயிருந்தபோது..." என்று பேச ஆரம்பிப்பார் ஒரு பெரியவர். உடனே பக்கத் திலே இருக்கிறவர்கள் எல்லாம் மெதுவாக எழுந்து நழுவ ஆரம்பித்து விடுவார்கள். ஏன் அப்படி நழுவ ஆரம்பிக் கிறார்கள்? அவர் வெளிநாடு போயிட்டு வந்த கதையை கேட்கிறதுக்கு விருப்பம் இல்லாமலா? அப்படி இல்லை. அந்தக் கதையை ஒரு தடவை இரண்டு தடவை கேட்கிற தென்றால் நல்லா இருக்கும். அதே கதையை இப்ப திரும் பத் திரும்ப அவர் சொல்ல ஆரம்பிக்கிறார்.

கேட்கிறவர்களுக்கு போர் அடிக்காமல் என்ன சேர் செய் யும்? அதுதான் தப்பித்து ஓடப் பார்க்கிறார்கள். நாம் பேச ஆரம்பித்ததும் எதிரிலே உட்கார்ந்திருக்கிறவர் எழுந்திருக் கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். நம்மிடம் ஏதோ கோளாறு என்று அர்த்தம். இதை அலட்சியமாக விட்டு விடக்கூடாது. என்ன விடயம் என்று சுயமாக ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

இன்றைக்குத் தகவலிலே Bore ஐ பற்றி ஒரு சின்ன ஆராய்ச்சி. போர் அடிக்கிற ஆசாமிகளுக்கு ஒரு முக்கியமான விடயம் தெரிவதில்லை என்கிறார் ஒரு நிபுணர். அது என்ன தெரியுமா? அவர்கள் அடிக்கிறது போர் என்கிறது அவர் களுக்குப் புரிவதில்லை. அதுதான் கஷ்டம். போர் ஆசாமி கள் எப்படி இருப்பார்கள். அவர்கள் சுபாவம் எப்படி என்றால்...

அவர்களுக்கெல்லாம் சொந்த திருப்தி தான் முக்கிய மாக இருக்கும். அவர்கள் எல்லாம் Sensitive ஆ இருக்க மாட்டார்கள். அவர்கள் எல்லாம் தங்களைப் பற்றியே அதிகமாக பேசிக்கொண்டிருப்பார்கள். மற்றவர்கள் மத்தி யிலே நாம் ஒரு Bore ஆசாமி என்று பேர் வாங்கக்கூடாது என்றால் சில நுணுக்கங்களை தெரிந்து வைத்திருக்க வேண்டும். அடுத்தவர்களிடம் எப்போது பார்த்தாலும் நம்மைப் பற்றியும் நம்முடைய குடும்பத்தைப் பற்றியுமே பேசிக் கொண்டிருக்கக் கூடாது. "நான்-எனது" என்கிற வார்த் தைகளை வரிக்கு வரிக்கு உபயோகப்படுத்திக் கொண்டி ருக்கக் கூடாது.

நேற்று இரவு என் பையன் ஒரு ஜோக் சொன்னான் பாருங்கள் என்று சுவாரஸ்யமாக ஆரம்பிப்போம். அது நமக்கு வேண்டுமென்றால் சுவாரஸ்யமாக இருக்கும். அடுத்தவர்களுக்கும் அப்படியே இருக்க வேண்டும் என் பது அவசியமில்லை.

சிலபேருக்கு Mental Mannerism உண்டு. சில பேருக்கு Physical Mannerism உண்டு.

இதுவே மற்றவர்களுக்கு Bore ஆகத் தெரியும். ஒரு குறிப்பிட்ட வார்த்தையை திருப்பித் திருப்பி உபயோகப் படுத்துகிறது சில பேருடைய Mannerism I mean என்கிற வார்த்தை அப்படித்தான். சிலபேர் வரிக்கு வரி என்ன நான் சொல்லுறது? என்று திருப்பித் திருப்பி கேட்டுக்கொண்டே இருந்தால் என்னத்தை நாம் சொல்லுறது.

நல்ல பேச்சை விருப்பமாகக் கேட்கிறவர்கள் தான் நல்ல விதமாகப் பேச முடியும். நாம் பேசுவதைத்தான் மற்றவர்கள் கேட்டுக் கொண்டு இருக்க வேண்டும் என்று நினைக்கிறவர்கள் Bore ஆசாமியாகத்தான் இருப்பார்கள்.

சரி Bore ஐ Cure பண்ண முடியுமா? முடியும். ஆரம் பத்திலேயே இதை கவனிக்க வேண்டும். சுயமாக சிந்தித் துப் பார்க்க வேண்டும். நாம் சம்பந்தப்பட்ட விடயங்க ளிலே மட்டும் நாம் Interest ஆக இருந்துவிடக் கூடாது. எம்மைச் சுற்றியிருக்கிற விடயங்களிலேயும் Interest எடுத்துக் கொள்ள வேண்டும்.

சுறுசுறுப்பாக வேலை செய்கிறவர்களுக்குப் போர் அடிக் கிறதில்லை. சும்மா உட்கார்ந்து இருக்கிறவர்களுக்குத் தான் போராடிக்கும். அதனாலே எப்பவும் Active ஆக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஒரு ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து நான் அடுத்த வருடம் ஓய்வுபெறப் போகிறேன் என்றார். உடனே ஒரு மாணவன் அழ ஆரம்பித்து விட்டான். ஆசிரியர் அவனு க்கு ஆறுதல் சொன்னார். அழாதேயப்பா... இன்னும் ஒரு வருடம் உங்களுடன் தான் இருப்பேன். அடுத்த வருடம் தானே ஓய்வு பெறப் போகி றேன் என்றார். மாணவன் கண்ணைத் துடைத்துக் கொண்டு நீங்க இந்த வருடமே ஓய்வுபெறப் போகிறதா நான் நினைத்தேன் சேர். இன்னும் ஒரு வருடம் இருக்குப் போலே இருக்கே...அதுதான் எனக்கு அழுகை வந்துவிட்டது என்றான்.

## கண்டி கட்டட அனர்த்தம்

# தகவல் உறுதிப்படுத்தப்பட்டால் கடும் சட்ட நடவடிக்கை

(கண்டி)

**கண்டி - பூவெலிகட பிரதேசத்தில் உடைந்து விழுந்த கட்டடத்தின் கட்டுமானப் பணிகளின் போது உரிய சட்ட விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை எனத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டால் குற்றவியல் சட்டத்தின் கீழ் குறித்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.**




பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போது அவர் இதனை தெரிவித்தார்.

கட்டடம் உடைந்து விழும் என முன்கூட்டியே தெரிந்திருந்தால் அது தொடர்பில் ஏனையவர்களுக்கு அறிவிப்பது ஒருவரின் தார்மீக கடமையாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டி, பூவெலிகட பிரதேசத்தில் 5 மாடிக் கட்டடமொன்று மற்றுமொரு கட்டடமொன்றின் மீது உடைந்து வீழ்ந்ததில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரே குடும்பத்தை சேர்ந்த கைக்குழந்தை உட்பட 3 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## பொப்பி தினத்தை முன்னிட்டு சபாநாயகருக்கு பொப்பிமலர் அணிவிப்பு

(கொழும்பு)

உயிர்நீத்த பாதுகாப்புப் படையினரை நினைவுகூரும் முகமாக வருடாந்தம் நடத்தப்படும் பொப்பி தினத்தை முன்னிட்டு, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு நேற்று முன்தினம் பாரா ளுமன்றத்தில் பொப்பி மலர் அணிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படைவீரர்கள் சங்கத்தின் 2020 பொப்பிமலர் நினைவு தினத்தின் தலைவர் குரூப் கப்டன் கே.டபிள்யூ கிரிந்த சபாநாயகருக்கு பொப்பி மலரை அணிவித்தார்.



இந்நிகழ்வில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க, பாதுகாப்பு படை வீரர்கள் சங்கத்தின் செயலாளர் லெப்டினண்ட் கேணல் அஜித் சியம்பலாப்பிட்டிய உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.(ஜ-4)

# கொரோனா தொற்று அச்சம் கட்டாரின் இலங்கைத் தூதரகம் பூட்டு

(டோஹா)

கொரோனா அச்சம் காரணமாக கட்டாரில் உள்ள இலங்கை தூதரகத்தை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி வரை தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாரில் உள்ள இலங்கை தூதரகத்தில் பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அங்கு பணியாற்றும் ஏனையவர்களையும் தனிமைப்படுத்தும் முகமாக நேற்று முன்தினம் முதல் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கட்டாரில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த காலப்பகுதியில் அவசர சேவைகளுக்காக 0097474703413, 0097470088771 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவசர சேவைகளுக்காக **consular.doha@mfa.gov.lk** என்ற இணையத்தளமூடாகவும் தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## மீரியபெத்தை மண் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 32 குடும்பங்கள் வீடின்றி நிர்க்கதி நிலையில்



(கொழும்பு)

நாடு முழுவதும் ஏதேனும் ஓர் இடத்தில், இயற்கையின் பாதிப்புகள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன.

இதன் காரணமாக ஆண்டு தோறும் நூற்றுக்கணக்கான உயிரிழப்புகள் பதிவாகிக் கொண்டிருக்கின்றன.

மேலும், உயிரிழப்பைவிட, பல மடங்கு பொருளாதாரச் சேதமும் ஏற்படுகின்றது.

பலர், தங்களது வாழ்விடங்களையும், ஆண்டுக்கணக்கில் சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்த சொத்துக்களையும் இழந்து தவிக்கின்றனர்.

இவ்வாறு, உடைமைகளையும், உயிர்களையும் இழந்தவர்கள் இன்றளவிலும் தமது வாழ்க்கையை சரியான முறையில் மாற்றியமைக்க முடியாமல் இருக்கின்றனர்.

அதேபோன்றுதான், மீரியபெத்தை மண்சரிவினால் பாதிக்கப்பட்ட 32 குடும்பங்கள் கடந்த 6 வருடங்களாக தொடர்ந்தும் பாதுகாப்பான குடியிருப்புகள் இன்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

2014 ஆம் ஆண்டு கொஸ்லந்தை மீரியபெத்தை பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் 37 பேர் காவுகொள்ளப்பட்ட நிலையில், 12 பேரின் உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டன.

இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிக குடியிருப்புகளில் தங்கவைக்கப்பட்ட நிலையில், 75 குடும்பங்களுக்கான வீடுகள் அமைக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு குடியமர்த்தப்பட்டனர்.

இந்த நிலையில், எஞ்சிய 32 குடும்பங்கள் இன்றும் பாதுகாப்பான குடியிருப்புகள் இன்றி பல்வேறு சிரமத்திற்கு மத்தியில் உயிராபத்தை எதிர்கொள்ளும் நிலையில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன், குறித்த குடும்பங்கள் மின்சாரம், குடிநீர், போக்குவரத்து என அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த 6 வருடங்களில் பல போராட்டங்கள் ,கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் தமக்கு பல்வேறு தரப்பினாலும் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளதே தவிர, இன்று வரை தீர்வுகள் எட்டப்படவில்லை என இவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதேவேளை, மின்சார வசதிகள் இன்றி குறித்த பகுதியில் வாழும் குடும்பங்கள் தினமும் காட்டு யானைகளினால் பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில், மீரியபெத்தை மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள குறித்த 32 குடும்பங்களுக்கும் வீட்டுத்திட்டமொன்றை அமைத்துக்கொடுத்து பாதுகாப்பாக குடியமர்த்தப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-4)

## கண்டி நகரசபை எல்லையில் 256 கட்டடங்கள் ஆபத்தான நிலையில்

(கொழும்பு)

கண்டி நகர சபை எல்லையில் சட்டவிரோதமான மற்றும் அவதானமிக்க 256 கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்றும் எனினும் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக கண்டி நகர சபையின் பிரதான பொறியியலாளர் பாலித அபேகோன் தெரிவித்துள்ளார்.

அனுமதியற்ற மற்றும் ஆபத்தான நிர்மாணங்கள் தொடர்பில் எடுக்கவுள்ள நடவடிக்கை தொடர்பில் மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகேவினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திலேயே பொறியியலாளர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடங்கள் தொடர்பில் உடனடியாக அவதானத்தை செலுத்துமாறும், ஆபத்தான நிலையில் உள்ள கட்டடங்கள் தொடர்பில் சட்டரீதியான செயற்பாடு மேற்கொள்ளுமாறும் ஆளுநர் இதன் போது ஆலோசனை வழங்கினார். (ஜ-4)

# சபாநாயகர் பக்கச் சார்பாக செயற்படுகிறார்

# ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அவருக்குரிய பொறுப்புகளை மறந்து ஆளும் தரப்பினருக்கு பக்கச்சார்பாக செயற்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன குற்றஞ்சாட்டினார்.**



20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் முதலாவது வாசிப்பு பாராளுமன்றத்தில்இடம்பெற்ற போது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். இதன்போது பாராளுமன்றத்தில் முறையற்று செயற்பட்ட ஆளும் தரப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே சபாநாயகர் செயற்பட்டதாகவும், இதனால் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு பாரபட்சம் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்வாறு குற்றஞ்சாட்டிய அவர் மேலும் கூறியதாவது,

அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தின் முதலாவது வாசிப்பு நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் அந்த திருத்தத்தில் காணப்படும் சிக்கலான ஏற்பாடுகளை கருத்திற் கொண்டு எதிர்ப்பு தெரிவித்தனர். இதன்போது ஆளும் தரப்பு உறுப்பினர்கள் எமக்கு எதிராக கடுந்தொனியில் கூச்சலும் இட்டனர். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் உரையின் போதும் ஆளும்தரப்பினர்அவரது கருத்தை முழுமையாக கூறவிடாது இடையூறு விளைவித்தனர்.

திருத்தத்திற்கு எதிராக நாங்கள் கருத்துக்களை முன்வைத்த போது அது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் நபர்களின் முகங்களை காண்பிக்காமல் வெறுமனே அவர்களது பேச்சுகளை மாத்திரமே பதிவு செய்துள்ளனர். இதுவே ஊடகங்களில் செய்தியாக வெளிவரும். இந்த செயற்பாடுகள் இடம்பெறும் போது சபாநாயகர் அமைதியாகவே இருந்தார். அவர் ஆளும் தரப்பு உறுப்பினர்களின் ஆலோசனைக்கமைய அவர்களை ஆற்றுப்படுத்தும் நோக்கத்திலேயே செயற்பட்டு வருகின்றார் என்பதை உணர்த்தும் வகையிலேயே இவரது செயற்பாடுகள் காணப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் பாராளுமன்றம் அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தை குறைவாக மதிப்பிட்டே அதன் அதிகாரங்களை அரசாங்கம் நீக்க முயற்சித்து வருகின்றது.

இதேவேளை சுயாதீன ஆணைக்குழுக்கள் , அரசியலமைப்பு பேரவை போன்றவற்றை நீக்குவதன் ஊடாக அரசாங்கம் எதனை எதிர்ப்பார்க்கின்றது? எதிர்காலத்தில் பெரும் சிக்கல்களை ஏற்படுத்தும் வகையில் வரையப்பட்டுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராக தொடர்ந்தும் செயற்படுவதுடன், பாராளுமன்றத்திற்குள் மாத்திரமின்றி வெளியிலும் தெளிவுப்படுத்தல்களை செய்வதற்கு நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம் என தெரிவித்தார். (2-7)

## அரச போக்குவரத்தை மேம்படுத்த புதிய திட்டம்

(கொழும்பு)

நாட்டின் தேசிய வருமானத்தில் மற்றுமொரு பிரதான காரணியாக அரச போக்குவரத்து சேவை காணப்படுகிறது. எனவே போக்குவரத்து சேவை முறையாக இடம்பெற்றால் மாத்திரமே சிறந்த வருமானத்தையும் பெற முடியும்.

இதற்காக ஏற்கனவே திட்டமிட்டுள்ள வேலைத்திட்டங்களை விரைவில் செயற்படுத்துவோம் என இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

மேலும், மக்களின் பிரச்சினைகளுக்கு துரிதமாக தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும். தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்றுக் கொண்டிருந்த அரசாங்கத்தை தோல்வியடையச் செய்வதே எமது இலக்காகக் காணப்பட்டது. எனினும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு துரிதமான தீர்வுகளைக் காண முடியாதுள்ளது. அது தொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது போக்குவரத்து பாரிய பிரச்சினையாகக் காணப்படுகிறது. 2015 க்கு முன்னர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட பேருந்துகளே தற்போதும் சேவையில் உள்ளன. இது தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் கலந்துரையாடியுள்ளோம். இதற்காக ஏற்கனவே திட்டமிட்டுள்ள வேலைத்திட்டங்களை விரைவில் செயற்படுத்துவோம் என்றார். (2-7)

## வீதி ஒழுங்கு மீறிய சாரதிகளுக்கு விசேட ஆலோசனை வகுப்புகள்

(கொழும்பு)

கொழும்பில் வீதி ஒழுங்கு விதிகளை மீறிய ஆயிரத்துக்கும் அதிகமான சாரதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க ஹப்புகொட இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

குறித்த சாரதிகளை எதிர்வரும் சனிக்கிழமை பொலிஸ் மேலதிக படைத்திணைக்களத்துக்கு அழைத்து ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இன்று முதல் பேருந்து முன்னுரிமை வீதிப் பகுதி அலுவலக போக்குவரத்து மற்றும் பாடசாலை வாக னங்களுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய பேருந்து முன்னுரிமை வீதியில் பயணிகள் போக்குவரத்து பேருந்துகள், அலுவலக பேருந்துகள் மற்றும் பாடசாலை வாகனங்கள் மாத்திரமே பயணிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-7)

## அடாவடி தேரருக்கு அழைப்பு அனுப்பிய நீதிமன்றம்



(கல்முனை)

மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதியான சர்ச்சைக்குரிய அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக நீதிமன்றத்திற்கு வந்து அல்லது பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வாக்குமூலம் அளிக்கும்படி அறிவிக்கப்பட்டிருக்கின்றது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மட்டக்களப்பு, கரடியனாறுப் பிரதேசத்தில் புராதன பௌத்த சின்னங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன எனவும், அதுபற்றி விசாரணை நடத்தும்படியும் சுமணரத்தன தேரர் குரல் எழுப்பியிருந்தார்.

இந்தநிலையில் அந்தப் பிரதேசத்தில் சிலர் நிர்மாணப் பணிகள் அல்லது வேறு பணிகளுக்காக நில அளவையில் ஈடுபட்டபோது அந்தப் பகுதிக்கு விரைந்த தேரர், அங்கிருந்த அரச அதிகாரிகளுடன் சண்டித்தனம் காட்டினார்.

வாக்குவாதத்தில் ஈடுபட்ட சுமணரத்ன தேரர், இறுதியில் அங்கிருந்த தொல்பொருள் திணைக்கள அதிகாரி ஒருவர் மீது தாக்குதலையும் நடத்தினார் என்ற காணொளிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7)

## சுவரில் ஏற்பட்ட விரிசல் வெளியேற்றப்பட்ட ஊழியர்கள்

(கொழும்பு)

கொழும்பு, கொள்ளுபிட்டியில் உள்ள இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபை கட்டடத்தின் ஊழியர்கள் திடீரென வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கட்டடத்தின் சுவரில் ஏற்பட்ட பிளவு காரணமாக அச்சத்தில் ஊழியர்கள் வெளியேறியுள்ளனர்.

கட்டடம் தாழிறங்கும் அபாயம் காணப்படும் அச்சத்திலேயே ஊழியர்கள் வெளியேறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


குறித்த கட்டடத்திற்கு அருகில் மேற்கொள்ளப்படுகின்ற புதிய கட்டட நிர்மாணப் பணிகள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (2-7)

# ஹேமசிறியின் சாட்சியத்தை மைத்திரி நிராகரிப்பு; ஜனாதிபதி ஆணைக்குழுவை அவமதிக்கும் செயலாகும்

## சாட்சியமளிக்க மைத்திரி,ரணிலுக்கு அழைப்பு

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ அளித்த சாட்சியங்களை மையப்படுத்தி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கை, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை அவமதிப்பதாகவே தாம் கருதுவதாக, சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அய்ஷா ஜினசேன தெரிவித்தார்.**



குறித்த ஊடக அறிக்கை தொடர்பில் தமது நிலைப்பாட்டை நேற்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு அறிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ, ஜனாதிபதி ஆணைக்குழுவில் தெரிவித்த சாட்சியத்தை நிராகரித்து மைத்திரிபால சிறிசேன கடந்த ஞாயிறன்று அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், அந்த அறிக்கை மூலம் தமது சேவை பெறுநர் அச்சமடைந்துள்ளதாக, ஹேமசிறி பெர்னாண்டோவின் சட்டத்தரணி டில்ஷான் ஜயசூரிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு வந்ததுடன் ஆணைக்குழுவில் சாட்சியாளரிடம் குறுக்குக் கேள்வி கேட்பதற்கான சந்தர்ப்பத்தைக் கோராமல், அறிக்கை மூலம் குற்றச்சாட்டை நிராகரிப்பது ஆணைக்குழுவின் அதிகாரத்தைப் பொருட்படுத்தாத நிலைமையாகும் என, சட்டத்தரணி டில்ஷான் ஜயசூரிய சுட்டிக்காட்டியிருந்தார்.

அவர் மேலும், அறிக்கையை வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதியின் தனிப்பட்ட செயலாளரை ஆணைக்குழுவிற்கு அழைத்து நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபடவில்லை என்பதை தெளிவுபடுத்துவதற்கான காரணத்தை வினவுமாறு சட்டத்தரணி கோரிக்கை விடுத்திருந்தார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் ஆணைக்குழுவின் கேள்விக்கு பதிலளித்து, அந்த அறிக்கை தொடர்பில் தாம் அறியவில்லை என, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சரித் குணரத்ன தெரிவித்திருந்தார்.

தமது சேவை பெறுநரால் அது குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், ஆணைக்குழுவில் விடயங்களை தெளிவுபடுத்துமாறு, முன்னாள் ஜனாதிபதியின் சட்டத்தரணிக்கு ஆணைக்குழு உத்தரவிட்டிருந்தது.

அதன்படி நேற்று ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் ஆணைக் குழுவில் ஆஜரானார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஆணைக் குழுவுக்கு சமுகமளித்தமை விஷேட அம்சமாகும்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன, " தனது சேவை பெறுநர் சார்பில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையானது, பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவின் சாட்சியத்தை மையப்படுத்தி பேராயர் சபை விடுத்த ஊடக அறிக்கைக்கு சமமானது எனத் தெரிவித்தார்.

இதன்போது கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சார்பில் மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஷமில் பெர்னாண்டோ, ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்னவின் குறித்த கூற்றை நிராகரித்தார்.

பேராயர் சபை வெளியிட்ட ஊடக அறிக்கையும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சார்பில் அவரது தனிப்பட்ட செயலாளர் வெளியிட்ட ஊடக அறிக்கையும் ஒருபோதும் சமமாக மாட்டாது என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், மைத்திரிபால சிறிசேனவின் குறித்த ஊடக அறிக்கை தொடர்பில் ஆணைக் குழு சட்டத்தின் 16 ஆம் அத்தியாயத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவின் சட்டத்தரணி டில்ஷான் ஜயசூரிய கோரினார்.

இந் நிலையில் சட்டமா அதிபர் திணைக்கள மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அய்ஷா ஜினசேனவின் நிலைப்பாட்டையும் அறிந்துகொண்ட ஆணைக் குழு அது தொடர்பிலான தீர்மானத்தை அறிவிப்பதாக தெரிவித்தது.

இதனிடையே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எதிர்வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதியும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் ஒக்டோபர் 6 ஆம் திகதியும் சாட்சியமளிக்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராக அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## வதிவிடமில்லாத முதலீட்டாளர்களுக்கு இலங்கை மத்திய வங்கியால் சலுகை

(கொழும்பு)

வெளிநாட்டு நிதி புழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் வதிவிடமல்லாத முதலீட்டாளர்களுக்கு அரசாங்கத்தின் கடனீட்டு ஆவணங்கள் மற்றும் ஏனைய பிரிவுகளில் முதலீடுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் வசதிகள் செய்யும் தேவை இலங்கை மத்திய வங்கியால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக, ஒரு வருடம் தொடக்கம் 2 வருட காலம் வரையில் அமெரிக்க டொலர் / இலங்கை ரூபாவை கொள்வனவு செய்தல் -விற்பனை பணப்பரிமாற்றம்"வசதிகளை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நிதி சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரம் பெற்றவர்களின் வணிக வங்கிகளுக்கு ஏற்படக்கூடிய வெளிநாட்டு நாணயம் தொடர்பிலான இடையூறை வரையறுக்கும் நோக்கில் கீழ்க்குறிப்பிட்ட வகையில் செயற்படுத்துவதற்காக நிதி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

ஒரே வெளிநாட்டு அந்நியச் செலாவணி விகிதத்தின் கீழ் அடிப்படை வெளிநாட்டு அந்நியச் செலாவணி பரிமாறல் மற்றும் பின்னர் மேற்கொள்ளப்படும் பரிமாறல்களை மேற்கொள்ளுதல்.

சம்பந்தப்பட்ட முதலீட்டை பூர்த்தி செய்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு அந்நியச் செலாவணி பரிமாறலுக்காக, அபராதத்திற்கு உட்பட்டதாக அதுவரையில் நிலவும் அந்நியச் செலாவணி விகிதத்திற்கு இந்த பரிமாறலை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குதல்.

இந்த வசதிகளினால் நாட்டுக்குள் அந்நியச் செலாவணி புழக்கம் அதிகளவில் காணப்படுமாயின் மாத்திரம் ஏற்புடையதுடன், ஆகக்குறைந்தது 25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொடக்கம் 1000 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான ஆகக்கூடிய தொகைக்கு உட்படுத்துதல்.

இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொழுது அமெரிக்க டொலர் / இலங்கை ரூபா பரிமாறல் விகிதத்தில் தேய்மானம் இடம்பெற்றால் இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்படக்கூடிய நட்டத்தை திறைசேரியின் செலவு என்ற ரீதியில் கவனத்தில் கொள்ளக்கூடிய வகையில் எதிர்காலத்தில் இலங்கை மத்திய வங்கியால் தனது ஈவு தொகைகளை திறைசேரிக்கு மாற்றும் பொழுது தீர்த்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஐ-4)

## இறால் வளர்ப்புத்திட்டத்தால் சூழலுக்கு பாதிப்பு எதுவுமில்லை

(கொழும்பு)

தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் உவர்நீர் இறால் வளர்ப்புத் திட்டத்தின் ஊடாக சூழலுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஜயந்தி விஜேரத்ன வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு, அதிகார சபையினூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் உவர் நீர் இறால் வளர்ப்புத் திட்டத்தின் ஊடாக, சூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே, அவர் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த நிலையில், தமது அதிகார சபையினூடாக மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களின் ஊடாக எந்த வகையிலும் சூழலுக்கு பாதிப்பு ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் கீழ் இயங்கும், இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினூடாக நன்னீர் மீன் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு முகாமைத்துவம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# புத்தாக்கத் துறையில் சிறந்து விளங்கும் நாட்டை உருவாக்குவேன்

## ஜனாதிபதி கோட்டா உறுதி

(கொழும்பு)

**புத்தாக்கத் துறையில் உலகில் சிறந்து விளங்கும் நாட்டை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளின் கேள்விக்கு ஏற்ற வகையில் சர்வதேச தரம் வாய்ந்த வினைத்திறன்மிக்க தொழிநுட்ப வல்லுநர்களை உருவாக்குவது முக்கிய தேவையாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

சாதாரண தரம் அல்லது உயர்தரத்தில் சித்தியடைந்த, சித்தியடையாத அனைவருக்கும் தொழில்நுட்பம் மற்றும் தொழிற் கல்வியை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை குறுகிய காலத்தில் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

திறன் விருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி, புத்தாக்கத் துறை இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில் இளைஞர் தலைமுறையை கல்வித் துறையில் ஈடுபடுத்துவதன் அவசியம் குறித்து விளக்கிய ஜனாதிபதி, கலைப்பாடங்களை கற்கும் மாணவர்களுக்கு தகவல் தொழிநுட்பம், தாதி மற்றும் முகாமைத்துவம் உள்ளிட்ட பல துறைகளில் திறமைகளை வளர்த்துக்கொள்ள முடியுமென்றும் குறிப்பிட்டார்.

ஆராய்ச்சி துறையை ஊக்குவிப்பதற்கு அரசு என்ற வகையில் அனைத்து உதவிகளையும் வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

புத்தாக்க நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கு ஆலோசனை மற்றும் சேவைகளை வழங்குவதை ஒரே நிறுவனத்தின் கீழ் கொண்டு வர உள்ளதாக இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீத்தா அரம்பேபொல குறிப்பிட்டார்.

கோள் மண்டலத்தை தற்காலத்திற்கு பொருத்தமான வகையில் நவீனமயப்படுத்தவும் நனோ தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் உயிர் தொழில்நுட்ப பூங்கா ஆகிய இரண்டையும் ஒரே வளாகத்தில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் இராஜாங்க அமைச்சர் சீத்தா அரம்பேபொல சுட்டிக்காட்டினார்.

தேசிய அடிப்படை நிறுவனம் மற்றும் நனோ தொழில்நுட்ப நிறுவனம் இணைந்து ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறைகளில் ஈடுபட வேண்டியதன் அவசியம் பற்றியும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்கள், தொழிற்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடத்திட்டங்கள் மற்றும் கலைத்திட்டங்களை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் அறிமுகப்படுத்துவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

உயர் கல்வி சட்ட திருத்தத்தின் மூலம் நிறுவன மற்றும் கலைத்திட்டம் தொடர்பில் உள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க முடியுமென நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

தொழில்நுட்ப பாடங்களுக்கான ஆசிரியர்கள் மற்றும் ஆலோசகர்களை இணைத்துக் கொள்ளும்போது குறைந்த மட்டத்தில் இருக்கும் சம்பள திட்டங்கள் பெரிதும் பாதிப்பு செலுத்துவதாக நிறுவன தலைவர்கள் தெரிவித்தனர்.

சமுத்திர பொருளாதாரத்தின் விளைவுகளை பெற்றுக் கொள்வதற்கு மீனவ சமூகங்களிடம் சென்று தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சியை வழங்குவதற்கு சமுத்திர பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொருளாதார புத்தெழுச்சிக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைசார் அமைச்சுக்களின் தலைவர்கள் மற்றும் நிபுணர்கள் பலரும் பங்குபற்றினர். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2125

**தபோதரன்**




பெண்கள் என்றாலே அழகுதான். அம்மா அன்பில் அழகு. அக்கா அரவணைப்பில் அழகு, தங்கை செல்லத்தில் அழகு, தோழி நட்பில் அழகு, காதலி கோபத்தில் அழகு, மனைவி மங்கள அழகு, தாய்மையில் பெண்கள் அழகோ அழகு

**செல்வா**



பசிக்கும் போது முதலில் அம்மா ஞாபகம் தான் வரும். அதன்பின்தான் சாப்பாட்டு ஞாபகம் வருது

**கெங்காதரன்**




எச்சூழலிலும் உடன் இருப்பேன் என்று வெறும் வார்த்தைகளால் உரைக்காமல் செயல்களில் உணர்த்தும் தேவதையின் கரங்கள் வாய்க்கப்பட்ட எவரும் அதிர்ஷ்டசாலிதான்

**கனிமொழி**



கனவு போல் கலைந்து விடுகிறது சில பெண்களின் ஆசைகள்

**தமிழினி**



மனதில் பாரத்தை தேக்கி வைச்சுக்கொண்டு அடுத்தவங்க பார்வைக்கு நல்லாயிருக்கிறமாதிரி நடிப்பதற்கு தனித்திறன் அவசியம். அதில் ஒஸ்கார் வாங்கியவர்கள் பெண்கள்

**சோபா**



குத்திக்காட்டும் மனிதர்களுக்கும் சுட்டிக்காட்டும் மனிதர்களுக்கும் இடையில் சிரித்துக்கொண்டு வாழ்ந்து காட்டுவதுதான் சவாலான வாழ்க்கை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சலுகை அடிப்படையில் தேங்காய் விற்பனை

## பெருந்தோட்ட அமைச்சர் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் தேங்காய் விலைகள் உயர்ந்துள்ள நிலையில் புதிய நுட்பத்தில் தேங்காய்களை சலுகை விலையில் விற்பதற்கு பெருந்தோட்டத் துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பு உட்பட ஏனைய சில பகுதிகளில் தேங்காய்களை பாரவூர்திகள் மூலம் சலுகை விலையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தவகையில் தேங்காய் ஒன்றின் அதிகபட்ச விலையாக 60 ரூபா என்ற அடிப்படையில் விற்பனை செய்வதற்கு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆன்மீகம்

## மனதை அடக்கி மாண்புமிகுத்து வாழ்வோம்



ஒருவர் மிகச் சிறந்த சொற்பொழிவாளர். வெவ்வேறு ஊர்களில், உலகின் வெவ்வேறு பகுதிகளில் சென்று அற்புதமாகப் பேசி மக்களின் மனங்களை வெகுவாகக் கவர்ந்தவர். எந்த இலக்கியத்தில் எந்த வரியைக் கேட்டாலும் அதைப் பிழையின்றி அப்படியே சொல்லக்கூடிய ஆற்றல் பெற்றவர். பாரதியார் பாடுவது போல் 'தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவு தர மொழிந்திடுதல்' என இவ்விரண்டையும் ஏற்றமுறப் பெற்றிருந்தார் அவர்.

அறிவிற்சிறந்த அவரிடம் எல்லோராலும் நெருங்கிப் பழக முடியவில்லை. காரணம் வெடுக்கென்று பேசுவார். முன் கோபம், மது, மாது என தீய பழக்கங்களும் உண்டு. அந்த அறிஞர்க்கு திருவள்ளுவர் தரும் பட்டம் என்ன தெரியுமா? அடிமுட்டாள்!

நூல்களைக் கசடறக் கற்றும், கற்றதை நயம்பட பிறர்க்கு எடுத்துக் கூறியும், படித்தவற்றின்படி நடவாதவனைப் போல அறிவில்லாதவன் அகிலம் முழுதும் கிடையாது. 'ஓதி உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும், தான் அடங்காப் பேதையின் பேதையார் இல்.' படித்தவர் ஆகவும், படிந்தவர் ஆகவும் யார் யார் விளங்குகின்றார்களோ அவர்களைத்தான் இந்த உலகம் பாராட்டி மகிழும். போற்றிப் புகழும்.

எப்படிப் படிப்பது, எப்போது படிப்பது, எதற்காகப் படிப்பது என்ற மூன்று கேள்விகளையும் நமக்குள் நாம் எழுப்பிக் கொண்டு அதற்கான விடைகளைப் பெற வேண்டும். எப்படிப் படிப்பது? 'கற்க கசடற, மாசு அற, ஐயம் திரிபு அற, எழுத்துப் பிழை அற' என்கின்றன இலக்கியங்கள். தவறில்லாமல், தெளிவாக விளங்கிக் கொண்டு படிக்க வேண்டும். எப்போது படிக்க வேண்டும்? இளமைக் காலத்திலேயே படிக்க வேண்டும்.

'இளமையில் கல்வி சிலை மேல் எழுத்து'

'கூற்றன் விடும் கயிற்றால் கழுத்தில் சுருக்கிட்டு இழுக்கும் அன்றோ கவிகற்கின்றதே!'

என்று எள்ளி நகையாடுகின்றார் அருணகிரிநாதர். காடு 'வா வா,' என்றழைக்க, வீடு 'போ போ' என்று விரட்டும் முதுமைக் காலத்திலேயா படிப்பது என்று தன் 'கந்தர் அலங்கார'த்தில் கேட்கிறார்.

எதற்காகப் படிப்பது என்கிற வினாவுக்கு 'கற்றபின் நிற்க அதற்குத் தக!' என்று வள்ளுவரும் 'கற்றது ஒழுகு' என்று பாரதியாரும் பதில் அளித்திருக்கிறார்கள்.

மேற்கோளாக இலக்கிய வரிகளைக் கூறுவது நம் மேதமையைக் காட்டும் வாழ்வில் மேற்கொள்வதற்காக படிப்பது நம் தகுதியைக் கூட்டும். ஆடு, மாடுகளை நம் செந்தமிழ்ச் செம்மொழி 'கால்நடை' என்று குறிப்பிடுவதை நாம் அறிவோம். மனிதர்களாகிய நாமும் கால்களால்தானே நடக்கின்றோம்.

நம்மைக் கால்நடை என்று யாரும் சொல்வதில்லை. அப்படி யாராவது சொன்னால் 'ஒரு கை' பார்த்து விடுவோம் அல்லவா!

அதன் போக்கிலே, ஒரு குறிக்கோள் இல்லாமல், கால் போகிற வழியிலேயே ஆடு, மாடுகள் செல்லும். 'சாஞ்சா சாயிற பக்கம் சாயிற செம்மறியாடுகளா' என்று அதனால்தான் கவிஞர்கள் பாடுகிறார்கள்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## நீதிமன்றத்தில் தீ!

(கொழும்பு)

கொழும்பு மேல் மாகாண நிலையாய மூவரடங்கிய மேல் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் நேற்றுக்காலை திடீர் தீ ஏற்பட்டுள்ளது. கட்டடத்தின் மேல் மாடியில் இந்த தீ பரவல் ஏற்பட்டுள்ளது. விரைந்து செயற்பட்ட தீயணைப்பு பிரிவினர், தீயை கட்டுப்படுத்தியுள்ளனர். இந்த தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-6)

## தனிமைப்படுத்தலை நிறைவு செய்த மேலும் 162 பேர் வெளியேற்றம்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் நடவடிக்கையை பூர்த்தி செய்த 162 பேர் நேற்று சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம், பூசா, பெரியகாடு, பெல்வெஹெரா, நீர்கொழும்பு மற்றும் ராஜகிரிய ஆகிய தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்தே இவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். 43 ஆயிரத்து 895 பேர் இதுவரை கட்டாய கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்துள்ளனர். மேலும் 7 ஆயிரத்து 120 பேர் முப்படைகளின் கீழ் இயங்கி வரும் 68 தனிமைப்படுத்தல் நிலையங்களில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். (ஜ-4)

## மேலும் 43 இலங்கையர்கள் நாட்டிற்கு

(கொழும்பு)

கட்டார் மற்றும் இந்தியாவில் சிக்கித் தவித்த 43 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். இவர்கள் அனைவரும் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர். இதற்கமைய, கட்டாரிலிருந்து 42 பேரும் இந்தியாவின் மும்பையிலிருந்து ஒருவரும் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் அனைவரும் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 170 | 200 |
| தக்காளி | 200 | 190 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 110 | 80 |
| கோவா | 120 | 130 | 140 | 120 |
| கரட் | 80 | 200 | 200 | 200 |
| பூசணி | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 100 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 130 | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 170 | 180 | 180 | 150 |
| பாகற்காய் | 400 | 380 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 140 |
| பயற்றங்காய் | 200 | 200 | 160 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | 280 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 250 | 240 | 160 |
| போஞ்சி | 300 | 300 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 50 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 250 | 250 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 70 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 100 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 90 | -- | 80 |



# சிறுவர் அரங்கம்

## பேசும் முன் யோசி

ஒரு அரசன் அந்தணர்களுக்கு உணவளிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அப்படி ஒருநாள் உணவளித்துக் கொண்டிருக்கையில் வானில் ஒரு கழுகு, தன் இரையான பாம்பு ஒன்றை தன் கால்களில் பற்றிக் கொண்டு கடந்து சென்றது.

பாம்பின் வாயிலிருந்து ஒரு சில துளிகள் விஷம் அரசன் வைத்திருந்த உணவுப் பாத்திரத்தில் விழுந்து விட்டது. எவரும் அதை கவனிக்கவில்லை.

அரசன் அந்த உணவை ஒரு அந்தணருக்கு அளிக்க, அதை உண்ட மறுகணமே அவர் இறந்து போனார். அரசன் மிகவும் வருத்தம் அடைந்தான்.

கர்ம வினைகளை நிர்ணயிக்கும் சித்ரகுப்தனுக்கு குழப்பமாகி விட்டது. யாருக்கு இந்த கர்மவினையைக் கொடுப்பது.? கழுகிற்கா?, பாம்பிற்கா? அல்லது அரசனுக்கா?

கழுகு அதன் இரையைத் தூக்கிக் கொண்டு சென்றது. அது அதன் தவறு இல்லை. இறந்து போன பாம்பின் விஷம் அதன் வாயிலிருந்து வழிந்தது பாம்பின் குற்றம் இல்லை.

அரசனும் இதை வேண்டுமென்றே செய்யவில்லை. அது அவனை அறியாமல் நடந்த விடயம். சரி தன் எஜமான் எமதர்மனிடமே கேட்கலாம் என்று எமனிடம் சென்று தன் குழப்பத்தைக் கூறினான் சித்ரகுப்தன்.

இதைக் கேட்ட எமதர்மன், சற்று நேர சிந்தனைக்குப் பிறகு, இதற்கான விடை விரைவில் கிடைக்கும் என்றும் காலம் வரும்வரை பொறுமையாக இருக்கவும் அறிவுறுத்தினார்.

ஒருநாள் சில அந்தணர்கள் உதவி நாடி அந்த அரசனைக் காணச் சென்றார்கள். அரண்மனைக்கு வழி தெரியாமல், வீதியோரமாக வியாரம் செய்து கொண்டிருந்த பெண்மணி ஒருவரிடம் வழி கேட்டார்கள்.



அவளும் சரியான பாதையை அவர்களுக்கு சொல்லி விட்டு “ஒரு விடயம். சற்று எச்சரிக்கையாக இருங்கள். இந்த அரசன் அந்தணர்களைக் கொல்பவன்” என்று கூறினாள்.

இந்த வார்த்தைகளை அவள் கூறி முடித்ததும், சித்ரகுப்தனுக்கு தெளிவு பிறந்து விட்டது. அந்தணரைக் கொன்ற “கர்மாவின் வினை” இந்த பெண்மணிக்கே என முடிவு செய்தார்.


மற்றவர்கள் மீது பழி சுமத்தும் போது அதில் உண்மை இருக்குமானால் பழி சுமத்துபவருக்கு அந்த கர்மாவில் 50 விழுக்காடு வந்து சேரும்.

பழி சொன்னதற்காக நடந்த எதையுமே உணராமல் அபாண்டமாக பழி சுமத்துவோருக்கே கர்ம வினை அனைத்தும் சேரும்.

**நீதி: மற்றவர்கள் மீது பழி சொல்லும் முன் யோசிக்க வேண்டும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## சர்ச்சைகளின் காலம்




தஞ்சைப் பெரிய கோயிலில் சேரமான் ஓவியம்

இதைக்கொண்டு பிராமணர்கள் வெவ்வேறு வழிபாட்டு வழக்கம் கொண்ட மக்களை ஒன்றாகத் திரட்டினார்கள். இது ராஜராஜனின் சமுதாய நிர்வாகத்துக்கு மிக அவசியமாக இருந்தது.

வரிவசூலுக்கு உதவாத தங்கள் ஆதிக்கத்துக்கு முழுக்க ஒத்துவராத நிலங்களை பிராமணர்களுக்கு வழங்கி அந்த இடத்தில் ஒரு மக்கள் பிரதேசத்தை உருவாக்கினார் ராஜராஜன்.

பிராமணர்கள் வன்முறை அற்றவர்களாகவும் கல்விமான்களாகவும் இருந்தது அரச நிர்வாகத்திற்கு இன்னும் வசதியாகப் போனது.

இதனால் ராஜராஜன் முதலியபல சோழ அரசர்கள் பிராமணர்க ளைப் போற்றினார்கள் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை.

ஏற்கனவே நாம் பார்த்தது போல சோழர்களின் போர்ப்படையில் தலைமை வீரர்களாக இருந்தவர்கள் பிராமணர்கள். இவற்றை ஒரு முக்கியமான அரசியல்- பொருளியல் நடவடிக்கையாகவே பார்க்க வேண்டும்.

அடுத்தது, பிராமணர்களின் ஜோதிட ஞானம். ஜோதிடத்தில் நம்பிக்கை கொண்ட ராஜராஜனால் பிராமணர்களின் ஜோதிட அறிவைக்கொண்டு பல காரியங்களைச் செய்ய முடிந்தது.

மூன்றாவது பிராமணர்களின் தர்மசாஸ்திரங்கள் குறித்த ஞானம். இது பல இனக்குழுக்களுக்கு நடுவே பொதுவான அறங்களை உருவாக்க உதவும் என்று நம்பினார்.

இதனால் அவருக்குப் பிராமணர்களின் தேவையும் அவர்களுடைய பல ஆலோசனைகளும் ஆட்சியின் சீரான செயற்பாட்டுக்கு உதவியாக அமைந்தன.

அன்று சைவ, வைணவ மத நம்பிக்கைகள் இன்னும் வலுவானதாகவும் மக்களைக் கட்டுப்படுத்தி இணைக்கக்கூடியதாகவும் இருந்தன. பிராமணர்களும் கோயில்களும் ஆதிக்கத்தின் கருவிகளே.

சோழ மன்னர்கள் பிராமணர்களைப் பயன்படுத்தி நிகழ்த்திய ஆதிக்கம் என்பது வன்முறை, அடக்குமுறை அற்றது.

அவர்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டதால் இதர மக்களின் பண்பாடுகள் கூட அழிக்கப்படவில்லை. ஆனால் ஏற்றத்தாழ்வு என்பது இயல்பாகத் தோன்றியது.

ஜாதி அமைப்புகள் நிர்வாக வசதிக்காக வலங்கை, இடங்கை என்று பிரிக்கப்பட்டன. இதில் பிராமணர்களும் அடக்கம்.

தேர்விழாக்களில் அவர்களுடைய பங்களிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால் தேர்வடத்தில் வலது வடத்தைப் பிடிப்பவர்கள், இடது வடத்தைப் பிடி ப்பவர்கள் என ஒரு பிரிவினை உருவாகி அதுவே பேதமாக மாறியது.

(தொடரும்)

விழிப்பதற்கே உறக்கம்; வெல்வதற்கே தோல்வி;
எழுச்சி பெறுவதற்கே வீழ்ச்சி.

– ராபர்ட் பிரவுனிங்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீதி பரிபாலனத்தின் மூலமே சிறுபான்மை மக்களின் உரிமையை நிலைநாட்ட முடியும்

இலங்கை பௌத்த சிங்கள நாடு என உரிமை கொண்டாடப்படுகிறதெனில் அங்கு சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென நம்புவது மடமைத்தனமாகும்.

பல்லின மக்கள் வாழ்கின்ற ஒரு நாட்டை தமக்குரியதென உரிமை கொண்டாடுகின்ற சிறுமைத்தனம் ஆட்சியாளர்களிடம் இருக்கும்போது அங்கு அடிமைத்தனம் இருக்கும் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

இங்கு அடிமைத்தனம் என்பது சிறுபான்மை இன மக்கள் வஞ்சிக்கப்படுவது முதல் அவர்களை நசுக்கி அந்த மக்களை மீள் எழமுடியாத வகையில் இரும்புக் கரம் கொண்டு நசுக்குவதைக் குறிப்பதாகும்.

இந்த வகையில்தான் இலங்கையில் சிறுபான்மை இன மக்களை பேரினவாதத் தீ காலத்துக்குக் காலம் சுட்டெரிக்கிறது.

ஆட்சி அவர்களுடையது. எனவே சிறுபான்மை இனத்தின் மீது ஆட்சியாளர்கள் எது செய்தாலும் அதனைக் கண்டு கொள்ளக்கூடாது என்ற நிலைப்பாட்டில் சர்வதேச சமூகம் இருப்பதனால், நிலைமை மோசமாகி வருகிறது.

ஆம், 1983இல் நடந்த ஜூலைக் கலவரத்தின்போது தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்படுவது கண்டு அன்னை இந்திரா காந்தி சீற்றம் கொண்டார்.

அதன் பின்னணியாக இந்திய விமானங்கள் இலங்கைக்குள் நுழைந்து உணவுப் பொட்டலங்களைப் போட்டதும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அன்றைய பிரதமர் ராஜிவ் காந்தி செய்ததும் இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பி வைத்ததும் நடந்தேறின.

ஆனால் 2009ஆம் ஆண்டு நடந்த கொடும் யுத்தத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டபோது – எங்கள் உயிரைக் காப்பாற்றுங்கள் எனக் கெஞ்சிக் கேட்டபோது சர்வதேச சமூகம் பாராமுகமாக இருந்தது.

தவிர, சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தங்கள் பணிகளை மறந்து ஓடித்தப்பின.

ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் கடன் கழிப்பதுபோல உலங்குவானூர்தியில் இருந்து வன்னி மண்ணைப் பார்த்துப் போனார். அதனோடு எல்லாம் முடிந்து போயிற்று.

ஆக, சர்வதேசம் தமிழ் மக்களுக்கு உதவும் என்ற நம்பிக்கை அனைத்தும் தவிடு பொடியாகின.

நிலைமை இதுவாக இருக்கையில், சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு இப்போது இருக்கின்ற ஒரேயொரு நம்பிக்கை நீதிபரிபாலனம் மட்டுமே.

எனவே இந்த நாட்டின் நீதிபரிபாலனம் வழங்கக்கூடிய தீர்ப்புகளே சிறுபான்மை இன மக்களுக்கு உரிமையையும் எதிர்கால நம்பிக்கையையும் தருவதாக இருக்கும்.

# மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசு தவறாகப் பயன்படுத்துகிறது

(கொழும்பு)

**அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் மக்கள் தெளிவுபெற வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை அரசாங்கம் தவறான வழியில் பயன்படுத்துகிறது. பாராளுமன்றில் சுட்டிக் காட்டப்படும் விடயங்கள் மக்கள் மத்தியில் முழுமையாக சென்றடைகின்றதா என்ற சந்தேகம் தோற்றம் பெறுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை உருவாக்குவதாக அரசாங்கம் குறிப்பிட்டது.

ஆனால் திருத்தத்திற்குள் எவ்வித விடயங்களை உள்ளடக்குகிறோம் என்று குறிப்பிடவில்லை.

மக்களின் அடிப்படை உரிமைகளை பறிக்கும் ஏற்பாடுகளும் மறைமுகமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

வர்த்தமானியில் வெளியாகியுள்ள அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் மக்கள் முதலில் தெளிவு பெறவேண்டும்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தால் பாராளுமன்றத்தின் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டு நிறைவேற்றுத்துறையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட நிலையிலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்பை மீறி அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தி பாரிய விளைவுகளை ஏற்படுத்தினார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு இவரது செயற்பாடு பிரதான பங்கு வகித்தது.

அரசியலமைப்பை திருத்துவதற்காகவும், புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காகவும் மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கியுள்ளார்கள் என ஆளும் தரப்பினர் குறிப்பிட்டுக்கொண்டு பெரும்பான்மை பலத்தை முறைகேடாக பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஆகவே 20 ஆவது திருத்தம் தொடர்பில் மக்கள் முதலில் தெளிவு பெற வேண்டும். நாட்டுக்கும், மக்களுக்கும்நன்மை பயக்கும் விடயங்களை எதிர்க்க வேண்டிய தேவை எதிர்த்தரப்பினருக்கு கிடையாது எனத் தெரிவித்தார். (ஐ)

# யாழில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

சனச இண்டர்நஷனல் நிறுவனம் கனடாவின் நிதி உதவியுடன் டி ஐ டி அமைப்பின் ஆலோசனையின் கீழ் உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் உள்ளூர் சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் " சுற்றுலாத்துறை அபிவிருத்தி வெகுமதி சங்கிலி " என்னும் செயற் திட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் அமைநதுள்ள தனியார் விடுதியொன்றில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சாள்ஸ் தலைமையில் இடம்பெற்றது.

மேலும் கொரோனாவுக்கு பின்னர் உணவகம் மற்றும் விடுதிகளின் பாதுகாப்பு மற்றும் நடவடிக்கை தொடர்பில் விளக்கமளிக்கும் செயலமர்வும் இடம்பெற்றது.

அத்துடன் விடுதிகள் மற்றும் உணவகங்களுக்கான கொரோனா பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் சனச இண்டர்நஷனல் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சமடணி கிரிவந்டெனிய, சனச அபிவிருத்தி வங்கியின் தலைவர் லக்ஸ் மன் அபயசேகர ,நிகழ்ச்சி திட்ட தலைவர் ஹர்ஷி அபேநாயக்க உட்பட விடுதி உணவகம் மற்றும் சுற்றுலாக் கற்கை நெறியை விளக்கும் நிறுவன பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ-8)

## சின்மயானந்தரின் சிந்தனையிலிருந்து

### எதிர்கால கவலை வேண்டாம்

❖ எல்லாவற்றையுமே உலக நன்மைக்காகக் கொடுப்பவர்கள்தாம் நமது பெரியோர்கள், ஆச்சார்ய புருஷர்கள், தீர்க்கதரிசிகளான ஞானிகள், அவர்கள் எதையுமே தமக்கு என்று வைத்துக் கொண்டதில்லை. அதனால் தான், உலகமே அவர்கள் பின்னால் அடிபணிந்து போய்க் கொண்டிருக்கிறது.

❖ கடவுள் நமக்கு உடலைக் கொடுத்தார். அதில் உள்ளத்தையும் கொடுத்தார். இரண்டுமே நமக்குப் பிறவியில் கிடைத்த சாதனங்கள்தாம். அவற்றை வைத்துக்கொண்டு நம்மை நாமே உருவாக்கிக் கொள்வது தான் நம் ஃகையில் இருக்கிறது.

❖ நம்மிடம் உள்ள சக்தி, மோசமான பண்புகளான கோபம், ஆசை, பொறாமை போன்றவற்றால் வடிந்து போகிறது.

❖ உயர்ந்த லட்சியங்களுக்காக நாம் நம்மை அர்ப்பணித்துக் கொள்ளும்போது நமது உள்ளத்தில் அரியதோர் சக்தி தூண்டி விடப்படுகிறது. இவை நமது தீய பண்புகளால் வடிந்துபோய்விடும் அபாயம் உண்டு. இதிலிருந்து நம்மைக் காத்துக்கொண்டால் நமது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

❖ நமது வாழ்க்கையில் மூன்றுவிதமான வடிகால்கள் உள்ளன. 1. கடந்த காலத்தையே நினைத்துக் கொண்டிருப்பது. 2. எதிர்காலத்தைப் பற்றியே எப்போதும் கனவு கண்டுகொண்டிருப்பது. 3. நிகழ்காலத்தில் நடப்பதை மிகவும் நிலையானதாக எண்ணி, அதையே கவனித்துக் கொண்டிருப்பது.

❖ நம்முடைய முயற்சியில் அளவுக்கு மீறிய எதிர்கால கவலைகள் இடம் பெறுவது நமக்கு ஏமாற்றத்தையே அளிக்கும்.

❖ வாழ்க்கையில் பிடிவாதமாக ஒரு குறிப்பிட்ட முறையில் வாழ்ந்து பழகிவிட்டவர்கள் அதை மாற்றிக் கொள்வது சிரமம்தான். ஏனென்றால், பிடிவாதமான சில பண்புகள் அவர்களிடம் ஊறிப்போய் இருக்கின்றன.

## சத்திய தரிசனம்

### உண்மையை நேசிப்போம்



❖ பெற்றோருக்கு மதிப்பளியுங்கள். அப்போது தான் எதிர்காலத்தில் நீங்கள் பெற்றோராகும்போது பிள்ளைகள் உங்களை மதிப்பார்கள்.

❖ பெற்றோரை மனிதர்களாக மட்டுமல்லாது, நடமாடும் தெய்வங்களாகவும் மதித்து நடக்க வேண்டும்.

❖ உடல் படகு போன்றது. வாழ்வோ ஓடும் ஆறு போன்றது. ஆற்றைக் கடந்து அக்கரை சேரும் வரை படகு ஓட்டையாகி விடாமல் காத்துக் கொள்ளுங்கள்.

❖ நல்லவற்றைக் காண்பதே கண்களின் பணியாக இருக்கட்டும். நல்லதைக் கேட்பதே காதுகளின் செயலாக இருக்கட்டும்.

❖ உங்களிடமுள்ள குற்றங்களைத் தேடி திருத்திக் கொள்ளுங்கள். மற்றவர்களிடம் உள்ள குணங்களைத் தேடிப் பாராட்டி மகிழுங்கள்.

❖ உலகம் உண்மையும், பொய்யும் கலந்த கலவை. இதில் உண்மையை மட்டும் நேசித்து வாழ்வோம்.

❖ ஐம்புலன்களை அடக்கி விட்டால் அவை நமக்கு நண்பர்கள். அவற்றிற்கு நாம் அடிமையாகி விட்டால் அவை எதிரிகள்.

# வடமாகாண பிறீமியர் லீக்-2020 (வவுனியா) யாழ்.மாவட்ட அணி முன்னிலையில்



வடமாகாண பிறிமீயர் லீக் 2020 தொடரில் வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்கள் பங்குபற்றுகின்றன. மேற்படி தொடரை ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்துகின்ற 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடராகும்.

மேற்படி தொடரில் யாழ். மாவட்ட அணி (GLADIATORS) 4 போட்டிகளில் பங்குபற்றி 4 இலும் வெற்றி பெற்று 8 புள்ளிகளையும் ஓட்ட எண்ணிக்கை விகிதத்தின் படி 3.114மீ, கிளிநொச்சி மாவட்ட அணி 4 போட்டிகளில் பங்குபற்றி 2 இல் வெற்றிபெற்று 4 புள்ளிகளையும் ஓட்ட எண்ணிக்கை விகிதத்தின்படி -0.752, முல்லைத்தீவு மாவட்ட அணி 4 இலும் 4 போட்டிகளில் பங்குபற்றி 2 இல் வெற்றி பெற்று 4 புள்ளிகளையும் ஓட்ட எண்ணிக்கை விகிதத்தின்படி-1.638, மன்னார் மாவட்ட அணி 4 போட்டிகளில் பங்குபற்றி ஒன்றில் வெற்றி பெற்று ஓட்ட எண்ணிக்கை விகிதத்தின்படி-0.323, வவுனியா மாவட்ட அணி 4 போட்டிகளில் பங்குபற்றி ஒரு போட்டியில் வெற்றி பெற்று 2 புள்ளிகளும் ஓட்ட எண்ணிக்கை விகிதத்தின் படி-0.385 பெற்றுள்ளனர்.

ஓட்ட எண்ணிக்கை விகிதத்தின்படி முதலாவதாக யாழ். மாவட்ட அணியும் இரண்டாவதாக கிளிநொச்சி மாவட்ட அணியும் மூன்றாவதாக முல்லைத்தீவு மாவட்ட அணியும் நான்காவதாக மன்னார் மாவட்ட அணியும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தெரிவு செய்யப்பட்ட நான்கு அணிகளுக்கு (Play off) முறையில் போட்டிகள் நடைபெறும். அதற்கமைவாக நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு முதலாவது தகுதி காண் போட்டி (qualifyer No.1) யாழ். மாவட்டத்திற்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் இடையில் நடை பெறவுள்ளது.

இதில் வெற்றி பெறும் அணி நேரடியாக இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்படும். தொடர்ந்து மதியம் சனிக்கிழமை 2 மணிக்கு விலகல் போட்டி (ELMINTOR) முல்லை மாவட்ட அணிக்கும் மன்னார் மாவட்ட அணிக்கும் இடையில் நடைபெறும். இப்போட்டியில் வெற்றி பெறும் அணி முதலாவது போட்டியில் தோல்வியடையும் அணியுடன் 2 வது தகுதிகாண் (QUALIFYER 2) போட்டியில் கலந்து கொள்வர். இறுதிப் போட்டியில் முதலாவது தகுதிகாண் போட்டியில் வெற்றிபெற்ற அணி 2 வது தகுதி காண் போட்டியில் வெற்றி பெறும் அணியை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி எதிர்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# விவாகரத்து செய்த மனைவிக்கு 192 கோடியை கொடுத்த கிளார்க்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சிறந்த வீரர்களில் ஒருவராக திகழ்ந்தவர் ஜாம்பவனான மைக்கேல் கிளார்க். அவுஸ்திரேலிய அணித்தலைவராகவும் இருந்த இவர் பல்வேறு சாதனைகளை படைத்துள்ளார்.

இவருக்கும் கீலி கிளார்க் என்ற பெண்ணுக்கும் கடந்த 2012ல் திருமணம் நடந்தது.

இந்த தம்பதிக்கு 2015ல் பெண் குழந்தை பிறந்தது.


சிறப்பாக சென்ற மைக்கேல் - கீலி வாழ்க்கையில் கடந்த 2019ஆம் ஆண்டு விரிசல் ஏற்பட்ட நிலையில் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தனர்.

பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் பரஸ்பர அடிப்படையில் நிரந்தரமாக பிரிந்தனர்.

இந்த விவாகரத்தின் போது கிளார்க் சுமார் 192 கோடி ரூபாய் மனைவிக்கு கொடுத்துள்ளார்.

விளையாட்டுத்துறையை சேர்ந்த வீரர் ஒருவர் மனைவிக்கு விவாகரத்தின் போது கொடுத்த மிகப்பெரிய தொகையாக இது பார்க்கப்படுகிறது. (4)

# இத்தாலி ஓபன் டென்னிஸ் ஜோகோவிச் புதிய சாதனை



இத்தாலி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ரோம் நகரில் நடைபெற்று வருகின்றது.

இதில் ஆண்கள் பிரிவில் நடந்த இறுதி ஆட்டத்தில் நம்பர் ஒன் வீரர் நோவக் ஜோகோவிச், போட்டித் தரவரிசையில் 8 ஆவது இடத்தில் இருந்த ஆர்ஜென்டீனாவின் டியேகோஷ் வார்ட்ஸ்மேனை வீழ்த்தி 5 ஆவது முறையாக மாஸ்டர்ஸ் பட்டத்தை கைப்பற்றியுள்ளார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தின் இறுதியில் ஜோகோவிச் 7-5, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனார்.

இது ஆயிரம் தரவரிசை புள்ளிகளை வழங்கும் மாஸ்டர்ஸ் வகை டென்னிஸ் போட்டியாகும்.

இதன் மூலம் ஆயிரம் தரவரிசை புள்ளி வழங்கும் மாஸ்டர்ஸ் போட்டியில் 2015-க்குப் பிறகு அவர் இந்தப் பட்டத்தை வெல்வது இதுவே முதல்முறை ஆகும்.

அத்துடன் மாஸ்டர்ஸ் பட்டத்தை 36 ஆவது முறையாகப் பெற்றும் ஜோகோவிச் சாதனை படைத்துள்ளார்.

முன்னதாக ஸ்பெயினின் ரபேல் நடால் 35 மாஸ்டர்ஸ் பட்டங்கள் வென்றதே அதிக பட்சமாக இருந்தது. இதனை ஜோகோவிச் முறியடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (4)

# ஐ.பி.எல்.தொடரில் 8 அணிகளிலும் விளையாடிய ஆரோன் பின்ச்



ஐ.பி.எல் போட்டிகளில் ஒரே அணிக்காக ஆரம்பத்தில் இருந்து விளையாடுபவர்கள் எப்படி மிகச்சொற்பமோ அதே போல் 8 அணிகளுக்காகவும் விளையாடிய வீரர்களும் மிக அரிது.

அந்த வகையில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற பெங்களூர் எதிர் ஐதராபாத் போட்டியில் பெங்களூர் அணிக்காக விளையாடியதன் மூலமாக ஐ.பி.எல்.தொடரில் 8 அணிகளுக்காக விளையாடிய முதல் வீரர் எனும் பெருமையை அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஆரோன் பின்ச் பெற்றுள்ளார்.

2010ஆம் ஆண்டு முதல் முதலாக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாடிய பின்ச் இப்போது தொடரில் இல்லாத டில்லி டெயார்டெவில்ஸ், பூனே வாரியர்ஸ் இந்தியா, குஜராத் லயன்ஸ் உட்பட 8 அணிகளுக்கு விளையாடியுள்ளார். (4)

## க.பொ.த உ/த...

தராதர உயர்தர பரீட்சை 2020 எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரையில் நடைபெற வுள்ளது.

இதேவேளை, 2020 ஆம் ஆண்டுக் கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி நாடு முழுவதிலும் உள்ள 2 ஆயிரத்து 936 மத்திய நிலையங்களில் நடைபெறவுள் ளது. (ம-3)

## முகமாலையில்...

மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட முகமாலைப் பகுதி யில் கடந்த 17ஆம் திகதி கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது சீருடைகளுடனான மனித எச்சங்கள் இனங்காணப்பட்டு பளைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து கிளி நொச்சி மாவட்ட நீதிபதி த.சரவணராஜா முன்னிலையில் நேற்றைய தினம் அகழ் வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

அகழ்வின்போது விடுதலைப் புலி களின் சீருடைகள் மற்றும் மனித எச்சங் களினாலான மண்டையோடுகள், எலும்பு கள் போன்றன மீட்கப்பட்டதுடன் விடு தலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படம் மற்றும் விடுதலைப் புலிகள் போராளிகள் அணிந்திருக்கும் சயனைட் குப்பி மற்றும் இலக்கத் தகடுகள் இரண்டு என்பன மீட்கப்பட்டதுடன் குறித்த அகழ்வு தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வு இன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி த. சரவணராஜா முன்னிலையில் இடம்பெறும். (ம-3,350)

## குடும்பஸ்தரின்...

தூங்கச் சென்ற குறித்த நபர் அறைக்குள் சென்று தூக்கில் தொங்கியுள்ளார்.

நேற்றுக் காலை எழுந்திருந்த மனைவி தனது கணவன் தூக்கில் தொங்கிய நிலையில் இருப்பதை அவதானித்தார்.

தகவல் பொலிஸாருக்கு தெரியப்படுத் தப்பட்டு. சடலம் மீட்கப்பட்டதுடன், உடற் கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த சம்பவத்தில் மெனிக்பாம் பகுதி யைச் சேர்ந்த சு.நாகேந்திரன் வயது34 என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். (ம-3,299)

## வடக்கின் வன்...

அவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் காங்கேசன்துறை யில் உள்ள அவரது அலுவலகத்தில் பதவியை ஏற்றுக் கொண்டதன் பின் ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனைகள், சட்ட மீறல்கள், வன்முறைக் குழுக்களின் அடா வடிகள் என அனைத்துக்கும் எதிர்ான நடவடிக்கைகள் தொடரும்.

இனியும் அவ்வாறான குழுக்கள் இயங்கினால் அவர்களுக்கு எதிராக, நீதி யாக செயற்பட்டு அவற்றின் செயற்பாடுகள் உடனடியாக கட்டுப்படுத்தப்படும். வடக்கு மாகாணத்தில் இயங்குகின்ற வன்முறை குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப் படுத்துவதற்கு அனைவரது ஒத்துழைப் பும் தேவை.

நீதியை கையிலெடுக்கும் இவ்வாறான வன்முறைக் கும்பல்களுக்கு எதிராக பாரபட்சமின்றி, துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (ம-3)

## கிணற்றிலிருந்து...

துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை மாலை சக் கோட்டை, அல்வாய் வடமேற்கு பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இராயப்பு அன்ரனிதாஸ் (வயது- 54) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனிமையில் வசித்து வந்த மேற்படி குடும்பஸ்தர் அருகில் உள்ள பொது கிணற்றிற்கு குளிக்கச் சென்ற நிலையில் கிணற்றிற்கு அருகாமையில் மரண மடைந்த நிலையில் சடலமாக காணப்பட் டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித் துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலி ஸாருக்கு கோரிக்கை விடுத்தார்.(ம-3, 60)

## தமிழ்த் தேசியக்...

தமிழ்த் தேசிய அணிகள் தியாக தீபம் திலீ பனின் நினைகூரல் தொடர்பாக கலந்து ரையாடியிருந்தன.

இதன்போது, இன்றைய தினம் தியாக தீபம் திலீபனின் நினைகூரல் தொடர்பான நீதிமன்றக் கட்டளை பிறப்பிக்கப்படவுள்ள நிலையில்.அந்தக் கட்டளையின் பின்னர் கட்சிகள் மீண்டும் கூடுவதற்கு தீர்மானித் துள்ளன.

இவ்வாறு இன்றைய தினம் கூடு கின்றபோது அடுத்தகட்ட நடவடிக்கை என்னவென்பது தொடர்பாக தீர்மானிக்கப் பட்டு அதன்பின்னர் ஊடகங்கள் மூலமாக பகிரங்கப்படுத்தப்படுமென கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ம-3)

## இரா.சம்பந்தன்...

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனும் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்த சட்ட வரைபைச் சவாலுக்குட்படுத்தும் வகை யில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் உயர் நீதி மன்றத்தை நாடியுள்ளார்.

அவர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் உயர்நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்துள்ளார்.

20ஆவது திருத்தச் சட்ட வரைபுக்கு எதிராக இதுவரை 6 தரப்பினர் உயர்நீதி மன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தியாக தீபம்...

திலீபன் நினைவேந்தல் ஊடாக இலங்கை குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை 106ஆம் பிரிவின் கீழ் பொதுக் குழப்பம் ஏற்படும் என்று பொலிஸாரால் பி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை அழைக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபன், தமிழீழ விடு தலைப்புலிகள் அமைப்பினர் என நிரூ பிக்க அவரது வாழ்க்கை வர லாற்றை முன் வைத்து யாழ்ப் பாணம் தலை மைப் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி சமர்ப் பணம் செய்தார்.

தரப்பு சமர்ப் பணங்களை ஆராய்ந்த மன்று கட்டளை வரும் வியாழக்கிழமை வழங்கப்படும் என்று அறிவித் தது. (ம-3)

## தியாகி...

16ஆம் திகதி வவு னியா நகரசபை பொங்கு தமிழ் தூபிக்கு முன்பாக விருந்து நல்லூர் வரையிலும் நடை பயணம் ஒன்று தமிழ்த் தேசிய மக் கள் முன்னணி யினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது.

குறித்த நடை பயணத்தினை நிறுத்துமாறு அதன் ஏற்பாட்டா ளர்களிற்கு பொலி ஸாரால் தெரிவிக் கப்பட்டதுடன், அதற்கான தடை உத்தரவினை கோரி வவுனியா பொலிஸாரால் நீதி மன்றில் வழக்கும் தாக்கல் செய்யப் பட்டிருந்தது. அதற் கமைவாக குறித்த நடை பயணத் திற்கு தடை விதி த்து நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதனால் இவ் நடைபயணம் இடம்பெற வில்லை

இது தொடர்பாக மன்றில் அறிக்கை செய்வதற்காக நடைபயணத்தை ஏற்பாடு செய்த வவுனியா நகர சபை உறுப்பினர் பி.ஜானுயன் மற்றும் பாராளுமன்ற உறுப் பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம் பலம், செ.கஜேந்திரன் ஆகியோரை எதிர் வரும் 28ஆம் திகதி காலை நீதிமன் றில் ஆஜராகுமாறு வவுனியா நீதவான் நீதி மன்றால் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அந்த கட்டளை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-3,299)

## ராஜபக்ஷ அரசை...

உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வியத்மக அமைப்பினால் அரசாங்கத் திற்கு உள்ளேயே பிளவு ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 11 பேருக்கு...

பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதையடுத்து இலங்கையில் கொரோனா தொற்று உறுதியானவர்களது எண்ணிக்கை 3 ஆயிரத்து 321 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

**சேவன**
திகதி 23/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 298
X 08 21 44 64

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 23-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2549
L 17 32 56 62
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**
திகதி 2020/09/23
சீட்டிழுப்பு இலக்கம் 4254
Z 8 7 6 0 9 0
தேசிய லொத்தர் சபை

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு திகதி 23/09/2020 சீட்டிழுப்பு இலக்கம் 1057
W 9 1 5 0 0 7
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 23/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0621
V 19 26 65 67 74

**ஜயோதா** Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1692 சீட்டிழுப்பு திகதி 23/09/2020
வெற்றி இலக்கங்கள் 01 32 59 63 N
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 54,055,324
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1224 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 23.09.2020 தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் F 26 42 54 77
57,825,304.80
SUPER 500 2 2 6 2

**அத கோடிபதி** ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்பு இல: 1050 வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.09.23
இன்றைய சுப்பர் பரிசு ரூ. 72,315,050/-
வெற்றி இலக்கங்கள் 13 17 22 62 M
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 2352
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 261

**சனிதா**
செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்பு திகதி: 2020.09.23 சீட்டிழுப்பு இல.: 3380 வர்ணம்: ஊதா
இன்றைய சுப்பர் பரிசு ரூ. 42,272,747.50
வெற்றி இலக்கங்கள் 28 37 42 44 C
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 2873

**ராசி** அதிர்ஷ்டம்
திகதி 23.09.2020 வெற்றி வாரம் 2931 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 06 24 40 41 மீனம்
ரூ.500 பரிசுக்குரிய 5853
ரூ.100 பரிசுக்குரிய 998
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,492,820
www.dlb.lk தொ. பே.: 0112 333 546/47

## 20 ஆவது திரு...

பொதுநலவாய மாஜிஸ்திரேட்டுகள் மற்றும் நீதிபதிகள் சங்கம், பொதுநலவாயத்தின் சட்டக்கல்வி சங்கம், பொதுநலவாய சட்டத்தரணிகள் சங்கம், பொதுநலவாய பத்திரிகையாளர்கள் சங்கம் ஆகிய அமைப்புகளே நீதிபதிகளுக்கான நீதிபதிகள் என்ற அமைப்புடன் சேர்ந்தே இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கின்றன.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது் அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளுக்கும் இடையிலான உறவுமுறை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பிலான பொதுநலவாய (லற்றிமார் ஹவுஸ்) கோட்பாடுகளையும் பொதுநலவாய சாசனத்தையும் அடியொற்றி நடப்பதாக இலங்கை அரசாங்கத்தினால் விசேடமாக உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

நியமனங்களை பொறுத்தவரை அரசியலமைப்பு சபையின் அங்கீகாரத்தை கட்டாயப்படுத்துவதன் மூலமாக தேசிய கருத்தொருமிப்புக்கான ஒரு ஏற்பாட்டை தற்போதைய அரசியலமைப்பு கொண்டிருக்கிறது. அரசியலமைப்பு பேரவைக்கு பாராளுமன்ற சபாநாயகர் தலைமை தாங்குகிறார். பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதியை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு பாராளுமன்ற உறுப்பினர், பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற சிறிய அரசியல் கட்சிகளினால் நியமிக்கப்படுகின்ற இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் உள்ளடக்கியிருக்கும் அரசியலமைப்பு பேரவைக்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் வகிக்கின்ற ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனான ஆலோசனைக்கு பிறகு பிரதமரினாலும் எதிர்க்கட்சித் தலைவரினாலும் கூட்டாக நியமிக்கப்படுகின்ற அரசியலில் சம்பந்தப்படாத மூன்று முன்னணி பிரஜைகளையும் கொண்டிருக்கிறது. இந்த மூவரையும் இரு பாராளுமன்ற உறுப்பினர்களையும் நியமிக்கும்போது சமூக பல்வகைமை மற்றும் துறைசார் நிபுணத்துவம் உட்பட இலங்கை சமூகத்தின் பன்முகத்தன்மையை அரசியலமைப்பு பேரவை பிரதிபலிப்பதை பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் உறுதிப்படுத்த வேண்டும்.

நீதித்துறை நியமனங்களை செய்யும் ஆணைக்குழுவின் எந்தவொரு உறுப்பினரையும் பதவிநீக்கம் செய்யும்போது அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்ற ஏற்பாட்டையும் தற்போதைய அரசியலமைப்பு கொண்டிருக்கிறது. தற்போது 20ஆவது திருத்த சட்டமூலத்தின் நோக்கம் இந்த ஏற்பாடுகளை இல்லாதொழித்து இலங்கையின் நிறைவேற்று அதிகார பீடத்துக்கும் பாராளுமன்றத்துக்கும் கீழ்பட்ட நிலைக்கு நீதித்துறையை கொண்டு செல்வதாக அமைகிறது. இது சட்டத்தின் ஆட்சிக்கும் அதிகாரங்கள் வேறாக்கல் கோட்பாடுகளின் அடிப்படை கூறுகளுக்கும் முரணானதாகும்.

அதனால் நாம் உத்தேச அரசியலமைப்பு மாற்றங்கள் பொதுநலவாய அடிப்படை விழுமியங்களுக்கும் நீதித்துறையின் சுயாதீனம் மற்றும் அதிகாரங்கள் வேறாக்கல் ஆகியவை தொடர்பான சர்வதேச தராதரங்களுக்கும் இசைவான முறையில் அமைவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை நிறைவேற்று அதிகார பீடத்தையும் பாராளுமன்றத்தையும் நாம் கேட்டுக்கொள்கிறோம் என்றார். (ம-03)

## கொல்கத்தாவை வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ்



ஐபிஎல் இருபது - 20 5-வது லீக் போட்டியில் கொல்கத்தாவை வீழ்த்தி மும்பை இந்தியன்ஸ் அணி 49 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ஷார்ஜாவில் நடைபெறும் 5-வது லீக் போட்டியில் டாஸ் வென்ற கொல்கத்தா அணியின் கப்டன் தினேஷ் கார்த்திக் முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

இதனையடுத்து களமிறங்கிய மும்பை அணி, 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 195 ரன்கள் எடுத்தது. இதனையடுத்து, ரோகித்சர்மா 80 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

196 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 146 ரன்கள் எடுத்து 46 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை அணியிடம் தோல்வியை தழுவியது. போட்டியின் ஆட்டநாயகனாக ரோகித்சர்மா தெரிவானார் (ம-03)


### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

### சிறுநீரகம் தேவை

B,O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்பு (4075)

076 239 9874

### வேலை வாய்ப்பு

- விற்பனை முகாமையாளர் - ஆண், பெண் (சிங்களம் பேச்சுத்திறன் உடையோர் தேவை.)
- விற்பனைப் பிரதிநிதி - ஆண்
- விற்பனை உதவியாளர்கள் - ஆண், பெண்
- கணக்காளர் உதவியாளர் - பெண் (கணினி அறிவுடையோர்.)

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். நேரில் சமுகளிக்கவும் குரு ஹார்ட்வெயார், கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி

தொடர்புகளுக்கு 077 743 5265

உரிமையாளர் குரு ஹார்ட்வெயார். (C-368)

### உடனடி வேலை வாய்ப்பு

O/L, A/L படித்த, ஆங்கில அறிவுடைய மாணவ, மாணவிகட்கு கணனியில் தேர்ச்சி, ஆங்கில அறிவுடைய மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

(யாழ். நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.) (4074)

தொடர்பு :- 077 038 5584

### கனேடிய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கற்கை நிலையம்
### HOTEL MANAGEMENT

திறமையை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச அங்கீகாரம்

- 100% வெளிநாடு செல்லும் வாய்ப்பு
- 6 மாத பயிற்சி முடிவில் அரச அங்கீகார சான்றிதழ்
- 100% வேலை வாய்ப்பு
- 15 நபர்கள் மட்டுமே ஒரு அணியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்



ஆரம்பம் : 27.09.2020

தொடர்புகளுக்கு :- 076 057 9999 (C-373)

### NEC

A/L2020

மாணவர்களுக்கான கருத்தரங்கு

அரசியல் விஞ்ஞானம்

ஆசிரியர்:- N.பாபு

காலம்:- 26,27ம் திகதிகளில்(சனி,ஞாயிறு)

நேரம்:- பி.ப1.30-5.00மணி

கையேடுகள் வழங்கப்படும்

வெளி மாணவர்கள் பங்குபற்றலாம்

தொடர்புகள்:-0768350999 (4167)

### ஊருணி தமிழ் மாணவர் உதவித்திட்டம் - JHCA Canada நடாத்தும்

### பௌதிகவியல் வழிகாட்டல் கருத்தரங்கு - 2020

நேரம்: காலை 8.30 மணி முதல் மாலை 2.00 மணி வரை

காலம்: 27.09.2020(ஞாயிற்றுக்கிழமை)

இடம்: ஹட்ச் களம், 4ஆம் மாடி, 218 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

சிறப்பு விருந்தினர்

கலாநிதி.தி.பத்மதாஸ்

B.Sc Hons (Physics), ICTP Dip.in THE Phy, MSc, PhD

(தலைவர், பௌதிகவியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்)

பாட விளக்கம்

த.ரமணன்

B.Sc Hons (Physics), M.Sc (Reading)

அனுமதி இலவசம்

(ஆசனம் வரையறுக்கப்பட்டுள்ளதால் முற்பதிவு செய்யும் குறிப்பிட்டளவு எண்ணிக்கையான மாணவர்களே அனுமதிக்கப்படுவர்)

ஏனைய மாணவர்கள் Zoom(ID-845 8785 9863, Passcode: 023129) மூலமாகவோ அல்லது Youtube(Aki Coach) மூலமாகவோ பங்குபற்ற முடியும்

பதிவு செய்ய:
https://tinyurl.com/phy-seminar-al-2020

அல்லது உங்கள் முழுப்பெயர், பாடசாலை, தேசிய அடையாளஅட்டை இலக்கம் என்பவற்றை 0776470614 என்ற WhatsApp அல்லது Viber இற்கு அனுப்பவும்

(4072)

### ENGLISH LANGUAGE COURSE (SPOKEN ENGLISH)

புதிய ஆங்கிலப் பாடநெறிகள் ஆரம்பம் : 26.09.2020

பிரிவு 01



- சனி, ஞாயிறு தினங்களில் மதியம் 2.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை நடைபெறும். (16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்குமான பாடநெறி.)
- பல்கலைக்கழக மாணவர்களுக்கான முழுமையான பாடநெறிக் கட்டணம் ரூபாய் 8000/= மட்டுமே. ஏனையவர்களுக்கு ரூபாய் 12000/= மட்டுமே.
- வேலை வாய்ப்பின் போது நிராகரிக்கப்பட முடியாத மிகப் பெறுமதியான சான்றிதழ்கள்.

(C-372)

E-CITY COLLEGE OF ENGLISH and IT SKILLS DEVELOPMENT

இல. 320/3, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(ஆனைப்பந்தி உப தபால் நிலையம் அருகில்.)

021 221 7106, 077 340 0418, 077 061 5242, 077 492 4166

### விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025/=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-308)

### கனடாவில் வேலைவாய்ப்பு உயர்கல்வி

Care Giver - பராமரிப்பாளர் வேலை ஊடாக நிரந்தரமாக குடும்பத்துடன் குடியேற

இலவச கருத்தரங்கு

27-09-2020 ஞாயிறு 11 மணி

CANADA MIGRATION PILOT

CIMS

CIMS COLLEGE 49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்

0777069777 / 0777068777 (C-308)

### அமெரிக்க லொத்தர் விசா

2020

நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.

இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட

உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்

என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS

0768226244 (C-308)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.